ஸ்ரீ குமரகுருபரர்



பங்குனி 1 (14—3—81)

தொகுதி 3 பகுதி 6

உ
சிவ சிவ

'ஸ்ரீ குமரகுருபரர்'

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய - இலக்கியத் திங்கள் இதழ்.

அட்டையில் :

சந்தானசாரியர்களுள் நான்காமவராகிய

ஸ்ரீ உமாபதிசிவம் திருவுருவம்

ஸ்ரீ குமரகுருபரர்

தொகுதி 3 பங்குனி பகுதி 6

மண்ணுலக அமுதம்

விண்ணவர் அமுதம் என்பதைத் தமிழரின் இலக்கியங்கள் பலவும் பேசுகின்றன. மண்ணுலக அமுதம் எது? மழையாக இருக்குமோ? திருவள்ளுவர் அப்படி மொழிந்தது உண்டு. குறளில் 'மழையை அமுதமாக நினைக்கலாம்' என்கிறார். 'மழையே மண்ணுலக அமுதம்' என்று பிரகடனப்படுத்தவில்லை. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் எனக்கு விண்ணவர் அமுதம் வேம்பாகக் கசக்கிறது. மண்ணுலகமுதம் தான் வேண்டும் என்கிறார்கள். அந்த விளக்கத்தின் சுவைநலத்தை அருள் பழுத்த கனிச்சுவைப் பகுதியுள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் நாம் உணர்ந்து நலம் பெற அருளியுள்ளார்கள்.

திருவாரூர் நான்மணி மாலை 16ஆம் பாடலுக்கு வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜ. அவர்கள் தலைமாலைகள் என்னும் தலைப்பிட்டு சுவையான கட்டுரை ஒன்று தந்துள்ளார்கள்.

பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களின் எளிய இனிய அரிய சாஸ்திர விளக்கப் பகுதி இந்த இதழில் பத்து பக்கங்கள் அளவில் வெளியிடப் பெற்றுள்ளது; நூலாக்கிச் சேர்த்து வைத்துக்கொள்வோர்கள் நலம் கருதி!

மதுரை திரு. தா. குருசாமி தேசிகர் அவர்களின் சித்தியார் இன்பம்என்ற சாஸ்திர விளக்கக் கட்டுரை இந்த இதழில் பிரசுரமாகியுள்ளது.

திரு. கண்ணபிரானின் அக்னி ஒரு புதுக்கதை. கவிதையைப் படிப்பது போல சிந்தித்து இருமுறைப் படிக்க வேண்டியது.

நம் முன்னோர்கள், மன்னர்கள் திருக்கோயில்களிடத்தும் ஆலயங்களைப் பாதுகாப்பவர்களிடத்தும் வைத்திருந்த மதிப்பு மரியாதைகளை இளம் எழுத்தாளர் திரு. முருகு. சுவாமிநாதனின் கட்டுரை விளக்குகிறது; கதைப் போக்கில்; அழகாக!

மற்றும் இறக்குமதி, ஆலய பூஜைப் படிக்காசு நிதி பற்றிய செய்திகள், தலயாத்திரை, இதமான வாழ்வுக்கு எளிய வழிகள் முதலிய அம்சங்களும் இதழுக்கு அணி சேர்க்கின்றன.

—ரி. ஆர்.

அட்டையில்

உமாபதி சிவாசாரியார்

உமாபதி சிவாசாரியார் தில்லை மூவாயிரவர் மரபைச் சார்ந்தவர். வடமொழி தென் மொழிகளில் வல்லவர். வேதசிவாகமங்களை நன்கு கற்றவர். மறைஞானசம்பந்தரிடம் தீட்சை பெற்றவர்: சந்தானசாரியார்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். தில்லைக்குக் கிழக்கே கொற்றவன்குடியில் மடங்கட்டி அதில் வாழ்ந்து வந்தவர். அந்த மடத்துக்கு நாடோறும் விறகு கொடுத்து வந்த பெற்றான் சாம்பான் என்பனுக்குத் தீட்சையளித்து முத்தி வழங்கியவர். இச்செயலை மெய்ப்பித்துக்காட்ட அரசனின் முன்னிலையில் முள்ளிச்செடிக்கு முத்தி வழங்கியவர். தில்லைத் திருவிழாவில் ஏறுமல் தடைபெற்று நின்ற கொடியைக் கவிபாடித் தானே ஏறுமாறு செய்தவர். பதினான்கு நூல்களை இயற்றியவர். இவற்றுள் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது சங்கற்ப நிராகரணம் என்ற ஏழுநூல்கள் மெய்கண்ட சாத்திரத் தொகுப்பிற் சேர்க்கப் பெற்றுள்ளன. மற்ற ஏழுநூல்களில் திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணமும் சிறப்புவாய்ந்த நூல்களாகும். இவர் கி. பி. 14-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் சித்திரைத் திங்கள் அத்த நாளில் திருவடிப்பேறு எய்தியவர்.

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணியவர்.



அருள் பழுத்த கனிச்சுவை

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

புருஷோத்தமன் என்ற சொல்லுக்கு ஆடவருள் சிறந்தவன் என்பது பொருள். புருஷோத்தமன் என்பதற்குச் சமமான ஒருசொல் தமிழில் உள்ளது. நம்பி என்பதுதான் அச்சொல். எந்தச் செயலினால் நம்பி என்ற உயர்நிலை-சிறப்பு நிலை பெற முடியும்? அருள் திறத்தால் தான்! அருள் திறம் செறிந்த ஆடவனையே 'நம்பி' என்று குறிக்கலாம். மற்றவர்களை நம்பிப் பயனில்லை.

குருதேவராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை, 'நம்பி' என ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அறிவிக்கிறார்கள். நம்பி ஆதலுக்குக் காரணமாகிய நல்லருள் அவரிடம் செறிந்துள்ளது என்றும் சுட்டி உரைத்தருளுகிறார்.

'நல்லருள் திறத்தால் நம்பி நீயே'

அருள் என்றாலே நல்லது மட்டும் தானே! நல்லருள் என்று விமரிசித்துக் குறிப்பது ஏன் என்று சற்றுச் சிந்திக்க வேண்டும். கொடையில் இரண்டு வகை உண்டு. தேவையானவர்களுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பது ஒரு வகை. தேவை இல்லாதவர்களுக்குத் தேவை இல்லாததைக் கொடுப்பதும்கொடைதான். இந்தஇரண்டாவது வகையைக் 'கொடைமடம்' என்பார்கள். மயில் உடுத்துக் கொள்

ளாது; போர்த்துக் கொள்ளாது என்ற செய்திகள் பேக னுக்குத்தெரியாதவை அல்ல; என்ருலும் அவன் மயி லுக்குப் போர்வை தந்தான்.

'உடாஅ போராஅ ஆகுதல் அறிந்தும்
படாம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோக்
கடா யானைக் கலிமான் பேகன்'

என்கிறது புறநானூறு.

இதேபோலத்தான் தொடர்பு அற்ருர் மாட்டுச் செலுத்துகின்ற மிகுபேரன்பாகிய அருளும், கொள்ளும் பாத்திரம் அற்றதாக அமைதலும் உண்டு. முன்னதைக் 'கொடைமடம்' என்றுசொல்வதுபோல இதை அருள்மடம் என்று சொல்லும் வழக்கம் இல்லை. ஏற்பதன் தகுதி, தேவை, துய்ப்புநிலை அறிந்து ஏற்பச் செய்யும் அருளெதுவோ அது நல்லருள் எனக் கொள்ளலாம். பட்டினியால் வாடிச் சுருண்டு சாலையோரம் மயங்கிக் கிடக்கிருன் ஒருவறியவன். அவன் கந்தல் ஆடையை மாற்ற ஒரு பட்டாடை வாங்கிக் கொடுக்கிருன் ஒருவன். அவனை அருளுள்ளம் கொண்டவன் என்றுதான் சொல்லவேண்டும், வறியவனின் அவசர அவசியத் தேவை அதுவன்று. எனவே அதனை நல்லருள் என்று சொல்ல முடியாது. இந்த உதாரணத்தைக்கொண்டு கொடுத்தல்தான் அருள் என்று கருதிவிடாதீர்கள் கொடுத் தலும் அருளாகும்.

இப்படி 'நல்லருள் திறத்தால் நம்பி நீயே! எனக் கூறி ஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஒரு சுவையான செய்தியைத் தெரிவிக்கிருர்கள்.

இனிப்புக்கு உச்சமான ஒரு வார்த்தை சொல்வ தென்ருல் 'தேவாமிர்தம்' என்ற வார்த்தையைத்தான் சொல்வது பழக்கம். சுவையான பொருளை உண்டவன் 'அமிர்தம் போல் இருந்தது' என்று பாராட்டுவதை நாம் கேட்டிருப்போம். 'அமிழ்து' என்று அதனைத் தமிழிலே சொல்வார்கள். அமிழ்து அமிழ்து என்று தொடர்து சொல்லிக் கொண்டே இருங்கள் 'தமிழ் தமிழ்' என்று கேட்கும். இரண்டும் இனிப்பால் உயர்ந்தவையே!

அமுதம் விண்ணுலகில் இருப்பது. அது மண்ணுலகத் தவர்கட்குக் கிடைக்காது ஆனால் ''மண்ணுலகத்திலேயே ஓர் அமுதம் கிடைக்கும். அதை நான் நிறைய உண்டிருக் கிறேன். இந்த மண்ணுலக அமுதத்தைக் சுவைத்த பிறகு தேவாமிர்தம் வேம்பாக அமைந்தது. அது எனக்கு ருசிக்க வில்லை'' என்கிறார் நம் சுவாமிகள்.

மண்ணுலகத்தில் கிடைக்கும் அமுதம் எது என்று தெரிந்து கொள்ள நம் ஆவல் உந்துகிறது. நாம் ஸ்ரீ குமர குருபர அடிகளாரைப் பணிவுடன் அவசர அவசரமாகக் கேட்கிறோம்.

'சுவாமி! மண்ணுலகத்திலேயே ஓர் அமுதம் கிடைக்கு மென்று அருளினீர்களே! அது எங்களுக்கும் கிடைக்குமா?'

'சாமான்யருக்கும் கிடைக்கும் சகலருக்கும் கிடைக்கும்'

'அருளாளராகிய தாங்கள் அருளுவதால் அது தெய் விகத் தொடர்பானதாகத்தான் இருக்கவேண்டும்'

'நிச்சய மாக'

'அப்படியென்றால் எங்களுக்குப் பக்குவம் வரவேண்டுமே'

'தேவை இல்லை'

'சித்தாந்த சாஸ்திர அறிவு வேண்டுமே'

'அது கூட வேண்டாம்'

'தாங்கள் அருளுகின்ற அமிர்தம் எங்கிருக்கிறதோ அந்த இடத்திற்கும் எங்களுக்கும் தொடர்பிருக்கவேண்டுமே'

'அப்படி ஒன்றும் கட்டுப் பாடில்லை; அந்த இடத்திற்கு நீங்கள் அன்னியராக இருந்தாலும், நன்னிலை பெறுதற்கு நீங்கள் அன்னியராக இருந்தாலும் உங்களுக்கு நிச்சயமாக அந்த அமிர்தம் கிடைக்கும். அந்த அமிர்தம் உண்டபிறகு தேவாமிர்தம் கிடைத்தாலும் சுவையாக இராது. மண் ணுலக அமிர்தத்தின் முன் தேவாமிர்தம் வேம்புக்குச்சமம்'.

அந்த அமிர்தம் எது?

— சிவ சிவ

ஆலய பூஜை படிக்காசு நிதிக்கு
நன்கொடையளித்த அன்பர்கள் விபரம்

3—2—81 வரை கூடுதல் ரூ. 7770-50

1. ஈரோடு திரு. கு. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 101-00
2. சென்னிமலை திரு. V. S. M. நஞ்சப்ப முதலியார் அவர்கள் 100-00
3. திருச்சி மாரியப்பா ஸ்டோர்ஸ் 100-00
4. மாயூரம் ஞானானந்தர் நற்பணி மன்றம் 51-00
5. மலைக்கோட்டை திரு K. தாயுமானப் பிள்ளை அவர்கள் 50-00
6. சிதம்பரம் திரு. N. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் 25-00
7. லால்குடி புலவர் திரு. கீரன் அவர்கள் 25-00
8. மதுரை திரு. நெ. பொன்னப்பன் அவர்கள் 25-00
9. ,, செல்வி. த. பத்மாவதி அவர்கள் 25-00
10. பொன்விளைந்த களத்தூர் திரு. மா. ஆறுமுகம் அவர்கள் 20-00
11. மதுரை திரு. யாழ் சுந்தரம் அவர்கள் 15-00
12. திருநாகேஸ்வரம் ஸ்ரீ நாகேஸ்வர ஆலய நிர்வாகஅதிகாரி திரு. பன்னீர்செல்வம்அவர்கள் 11-00
13. திருமுறைப்பணி திரு. A. சோமசுந்தரம் அவர்கள் 10-00
14. மதுரை திரு. நீ. சி. சுந்தரராமன் அவர்கள் 10-00
15. திருநெல்வேலி திரு. T. V. சங்கரக்குமாரு அவர்கள் (23-1-81, 17-2-81தேதிகளில்) (10+10) 20-00
16. மதுரை பாப்புலர் நர்சரி பள்ளி ஆசிரியைகள் 10-00
17. ஈரோடு திரு. செ. ஆ. சண்முகவேல் B. A., B. L. அவர்கள் 10-00

18. ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மேல் ,,
நிலைப்பள்ளி தமிழாசிரியை
புலவர். S. சரோஜா B. Lit. அவர்கள் 10-00
19. சென்னை திரு. M. சக்குவேல் அவர்கள் 7-50
20. பாளையங்கோட்டை திரு. M. C. முத்தையா
அவர்கள் 5-00
21. திருப்பனந்தாள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை
செல்வி U. சுலோசனு M. A. அவர்கள் 5-00

22. திருப்பனந்தாள் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்
நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்
திரு. K M. ராஜகோபாபாலன் அவர்கள் 5-00
23. ஆசிரியர் திரு. R. சுப்பிரமணியன் அவர்கள் 5-00
24. ,, ,, A. ராஜமாணிக்கம் அவர்கள் 5-00
25. ,, ,, G. ராமலிங்கம் அவர்கள் 5-00
26. ,, ,, G. S. V. தேசிகன் அவர்கள் 5-00
27. ,, ,, R. சுவாமிநாதன் அவர்கள் 4-00
28. ,, ,, R. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 4-00
29. ,, ,, N. A. சொக்கலிங்கம் அவர்கள் 4-00
30. ,, ,, N. பசுபதி அவர்கள் 4-00
31. ,, ,, S. முருகையன் அவர்கள் 4-00
32. ,, ,, N. ராமமூர்த்தி அவர்கள் 4-00
33. ,, ,, S. அருணுசலம் அவர்கள் 4-00
34. ,, ,, S. சீனுவாசன் அவர்கள் 4-00
35. ,, ,, S. மாத்ருபூதம் அவர்கள் 4-00
36. ,; ,, S. கண்ணன் அவர்கள் 4-00
37. ,, ,; S. ராமதுரை அவர்கள் 4-00
38. ,, ,, S. சொக்கலிங்கம் அவர்கள் 4-00
39. ,, ,, S. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் 4-00
40. ,, ,, V. S. கிருஷ்ணசாமி அவர்கள் 4-00
41. ,, ,, N. ராமகிருஷ்ணன் அவர்கள் 4-00
42. ,, ,, T. குருநாதன் அவர்கள் 4-00
43. ,, ,, K. சந்தானம் அவர்கள் 4-00

44. ,, ,, R. ராஜேந்திரன் அவர்கள் 4-00
45. ,, ,, S. சுவாமிநாதன் அவர்கள் 4-00
46. ,, ,, S. சந்திரசேகரன் அவர்கள் 4-00
47. ,, ,, K. J. சுப்ரமணியன் அவர்கள் 4-00
48. ,, ,, K. J. வெங்கட்ராமன் அவர்கள் 4-00
49. ,, ,, A. தனபதி அவர்கள் 4-00
50. ,, ,, K. A. பாலசுப்ரமணியம் அவர்கள் 4-00
51. ,, ,, N. சுந்தரம் அவர்கள் 4-00
52. ,, ,, K. சேதுராமன் அவர்கள் 4-00
53. மதுரை திரு. P. சந்திரசேகரன் அவர்கள் 2-00
54. திருநெல்வேலி திரு. S. D. நாயகம் அவர்கள் 1-00
55. விக்ரமசிங்கபுரம் திரு P. சங்கரன் அவர்கள் 1-00
56. திருநெல்வேலி திரு. P. M. முத்துக்கிருஷ்ணய்யர் அவர்கள் 1-00

6-3-81 வரை கூடுதல் ரூ. 8540-00

சென்ற இதழில் எண் 18 இல் மதுரை சுந்தரேசம் பிள்ளை என்றிருப்பதை மதுரை யாழ். கிதே சுந்தரம் பிள்ளை என்று திருத்திப் படித்துக்கொள்ளவும்.

இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்.

(அ) மன நோய் குடல் நோய் குணமாக

வெள்ளை வெங்காயத்தை நன்ருக வதக்கி நெய்யோடு சாப்பிட்டு வந்தால் மனநோய், குடல்நோய் யாவும் குணமாகும்.

(ஆ) நெஞ்செரிவுக்கு

பேரிச்சம் பழம் அதாவது உலர்ந்த காய்களை பாலில் கலந்து சாப்பிட்டு வர நெஞ்செரிவு குணமாகும்.

(இ) தந்த சுத்திக்கு

ஆல்விழுது, நாயுருவி, வேம்பு இக்குச்சிகளில் ஒன்றினுல் தந்த சுத்தி செய்து வெந்நீரில் முகம் கழுவி வந்தால் நன்று.

(ஈ) தலைவலி, தலைபாரத்திற்கு

கருஞ் செம்பை பூவை, நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி தலை முழுகி வந்தால் தலைவலி, தலைபாரம், ஒற்றைத்தலைவலி, சீதளம் தீரும்.

(உ) வாத ரோகம் நீங்க

கடல் நீரை காய்ச்சி அருந்த வாதரோகம், குடற்கட்டி, குன்மம் ஆகியவை நீங்கும்.

டாக்டர்: N. சடையப்பன், S. M. P.

உள்ளத்தைத் தொடும் ஒரு கடிதம்

கு. சிவசுப்பிரமணிய பிள்ளை, ஈரோடு,
19, A. சீனிவாச வீதி, 19—2—1981
ஈரோடு — 2

To

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசிமடம், திருப்பனந்தாள்.

திருவடிகளுக்கு வணக்கம்பல:

நான் ஸ்ரீ குமரகுருபரர் சமய இலக்கிய திங்களிதழின்
2-ஏ/488. நெ. சந்தாதாரர்.

ஷ மார்கழி இதழில் அன்பர்களுக்கு ஓர் அவசர அழைப்பு என்பதான வெளியீடு நல்ல முயற்சிதான். அதில் சுவாமிகள் குறிப்பிடும் பணிகளை நிறைவேற்றக் கோடிக் கணக்கான பணம் தேவை. விளம்பரம்மட்டும் இந்தகாலத்தில் போதாது. சமயப்பற்றுள்ள ஊழியர்களை நகரங்கள் தோறும் கிராமங்கள்தோறும் திரட்டவேண்டும். உயர்திரு. ஸ்ரீ கிருபானந்தவாரியார் சுவாமிகள் போன்ற அடியார் திருக்கூட்டம் ஊர், ஊராகச்சென்று பணம்திரட்டவேணும் மாநில அளவில் பெரிய மடாதிபதிகள், சமயச் சொற்பொழிவாளர்கள் அடங்கிய சபை அமைத்து சர்க்காரோடு போராடி கோவில்கள் ஊழியர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட மானியங்களைத் திரும்பப்பெற முயற்சிக்க வேண்டும். இதற்கு பகீரத பிரயத்தனம் தேவை, மயிலே மயிலேஇறகுபோடு என்றால்கிடைக்காது. மகாத்மாகாந்திஜியின் வழியில் சத்தியாக்கிரகம்போன்ற முறைகளைக் கடைப்பிடித்து,சிறைக்குப் போகவேண்டி ஏற்பட்டாலும் அதற்கும் துணிந்து அடியார்களை திரட்டி சிறைக்கும் போய் தியாகம் செய்தால்தான் நமது குறிக்கோள் நிறைவேறுமென்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்வதோடு, எனது ஒருமாத வருமானம் ரூ. 101/-யும் தங்கள் திருப்பணிக்கு கும்பகோணம் இந்தியன் ஓவர்சிஸ்பேங் D. D. 80/4 635208. நெ. 20/3, டிராப்ட் அனுப்பியுள்ளேன். பாதகாணிக்கையாக ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்க வேணுமாய்க்கோரும்,

தங்கள் ஊழியன்,
கு. சிவசுப்பிரமணியன்.

உ

சொக்கலிங்கம் துணை

Sri kasi Mutt Religious Charities Tirupanandal

PROPRIETOR & TRUSTEE

H. H. Sri-la-Sri Kasivasi Muthukumaraswami Tambiran Swamigal Avargal

திருப்பனந்தாள்.

ஸ்ரீ வீரியம்மன் பங்குனி உத்திரப் பெருவிழா

11—3—81 முதல் 17—3—81 வரை

திருவிழாக்காலங்களில் திருமுறைப்பணி செய்யும் இசைவாணர்கள் :-

தமிழ்மறை இன்னிசைப்பண்மணிகள்,

1. திரு. T. M. விசுவலிங்க சபாபதி சகோதரர்கள் தேவார இசைமணி, திருவாவடுதுறை
2. திரு. S. முத்துக்கந்தசாமி, ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி;
3. திரு. S. தண்டபாணி ஓதுவார், திருமுறைப்பணி, ஸ்ரீ அருணஜடேஸ்வர சுவாமி திருக்கோயில், திருப்பனந்தாள்;
4. திரு. V. தியாகராசன், ஸ்ரீ காசிமடம், திருமுறைப்பணி. திருப்பனந்தாள்,
5. திரு. A. சோமசுந்தரம், ஸ்ரீ காசிமடம், திருமுறைப்பணி, திருப்பனந்தாள்;
6. திரு. சந்தரமௌலி, பிடில், திருவானைக்காவல்.
7. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம், திருப்பனந்தாள்;

Sri Kasi Mutt
Religious Charities
Tirupanandal

உத்திரவுப்படி
R. V. Subramaniam
Manager.

குறிப்பு :- திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் (1) 20—3—81 ஆம் தேதி பங்குனி உத்திரத்தன்று திருவாரூரிலும் (2) 24—3—81 ஆம் தேதி காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் பங்குனி உத்திரப் பெருவிழாவிலும் இன்னிசைத் திருமுறைகோஷ்டி இரவில் நடத்தப்பெறும். (3) 7—4—81 ஆம் தேதி பங்குனிப் பரணியில் இக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்;

உ

சொக்கலிங்கம் துணை

திருவாரூரில் தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-வது அதிபர்
ஸ்ரீ ல ஸ்ரீ சுாசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின்வண்ணம் நடத்தப்பெறுவது.

ரௌத்திரி ஞு பங்குனி மீ 7உ (20-3-81)
வெள்ளிக்கிழமை

பங்குனி உத்திரம்

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கி
பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிதிக் கிட்டாமை நீணு டறியுமன்றே.

-திருநாவுக்கரசர்,

திருமுறைவாணர்கள்;-

1. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்,
திரு. T. M. விசுவலிங்கம், சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை;
2. திரு. முத்துக்கந்தசாமி தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார். திருச்சி,
3. திரு. பா. ராமச்சந்திரன், விருத்தாசலம்.
4. திரு. N. ஆறுமுக தேசிகர் - வயலின் விழுதியூர்
5. திரு. கோ. வேங்கடராமன் - மிருதங்கம், திருப்பனந்தாள்.

"ஆரூரமர்ந் அரசே போற்றி"

Sri Kasi Mutt
Religicus Charities
Tirupanandal

உத்திரவுப்படி,
R. V. Subramaniam
Manager.

குறிப்பு;- நிறைசெல்வத் தியாகேசப் பெருமான் சந்நிதியில் இரவு 8-மணிக்குத் தொடங்கிச் சிவமே நிலவும் தேரோடு வீதியில் இரவு முழுவதும் இன்னிசைத் திருமுறை பாடி மீண்டும் காலை 6-மணிக்கு வான்மீகநாதர் சந்நிதியில் பூர்த்தி செய்யப்பெறும்.

30. பலாத்காரத்தை உபயோகிப்பதை எதிர்த்து எச்சரிக்கை

தமிழாக்கம். கோ. வன்மீகநாதன்

எவனொருவன் மனிதர்களை ஆள்பவருக்குப் பரப்பிரும்ம (டௌவ்)
(உபதேச) த்தால் துணைபுரிய எண்ணுகின்றானோ
அவன் படைபலத்தால் ஒரு நாட்டைக் கைப்பற்றுவதை முற்றிலும்
எதிர்ப்பான்.
ஏனெனில் அத்தகைய காரியங்கள் (எய்தவன் மேலேயே சில
அஸ்திரங்கள் திரும்பி வந்து தாக்குவதுபோல) வளர்த்த கடா
மார்பில் பாய்வது போல அவனையே தாக்கலாம்.
எங்கெங்கு சேனைகள் (எதிரியின் நாட்டில்) முகாமிட்டுத்தங்கி இருக்கின்றனவோ அங்கெல்லாம்
நெருஞ்சி முள்ளும் முட்செடி கொடிகளும் தான் விளைகின்றன.
ஒரு பெரும் படையைத் திரட்டுதலின் பலனாக
அடுத்த ஆண்டு விளைச்சல் இல்லாத ஆண்டாகி விடுகிறது.
ஆகையால் ஒரு சிறந்த சேனாதிபதி தான்மேற்கொண்ட காரியத்தை
முடித்துவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்கிறான்.
தன் காரியத்தைச் சாதிக்கின்றான், ஆனால் அதனால் களிப்புறுவதில்லை;
தன் காரியத்தைச் சாதிக்கின்றான், ஆனால் அதைப்பற்றித் தற்புகழ்ச்சியாக மார்தட்டிப் பேசுவதில்லை;
தன் காரியத்தைச் சாதிக்கின்றான், ஆனால் அதை எண்ணிப்
பெருமைப் படுவதில்லை.
வருந்தத்தக்க அத்யாவசியமாகத் தன் காரியத்தைச் சாதிக்கின்றான்;
தன் காரியத்தைச் சாதிக்கின்றான், ஆனால் வன்முறையை விரும்புவதில்லை.
ஏனெனில் காரியங்கள் தம் உச்ச நிலையை அடைந்தவுடன்
முதுமையால் பீடிக்கப்பட்டு க்ஷீணிக்கின்றன;
மேலே சொல்லப்பட்ட வன்முறை டௌக்கு விரோதமாக இருக்கும்.
எவனொருவன் டௌவுக்கு விரோதியாக இருக்கிறானோ
அவன் இளமையிலேயே அழிந்து போவான்.

31. தீமையின் படைக்கலன்கள்.

மற்றெல்லாவற்றையும்விட படையாட்களே தீமையின் கருவிகள்,
மக்களால் வெறுக்கப் பட்டவர்கள்.
ஆகையால், சமயப்பற்றுள்ள மனிதன் (டௌவால் ஆட்கொள்ளப்
பட்டவன்) அவர்களைக் கண்டால் ஒதுங்கிப் போகிறான்,
அவர்களுடன் தொடர்பு கொள்வதை விரும்புவதில்லை.
கனவான் (படைகளோடு சம்பந்தபடாத) சாதாரணகுடி மகன்
வாழும் வாழ்க்கையில் இடது பக்கத்தை ஆதரிக்கின்றான்,
ஆனால் படையோடு சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களில்
அவன் வலது பக்கத்தை ஆதரிக்கின்றான்.[1]
படையாட்கள் தீமையின் படைக்கலன்கள்.
அவர்கள் கனவானின் ஆயுதங்கள் அல்லர்.
படையாட்களை உபயோகிப்பது தவிர்க்கவொண்ணாததாயிருக்கும்
சந்தர்ப்பங்களில்

அமைதியான அடக்கமே மிகநல்ல நெறி.
வெற்றியிலும் (வெற்றியே பெறினும்) அழகு இல்லை.
எவனொருவன் அதை அழகுடையது என்கின்றானோ
அவன் படுகொலையினால் மகிழ்வெய்துபவனாக இருப்பான்.
எவனொருவன் படுகொலையினால் மகிழ்வெய்துகின்றானோ
அவன் உலக முழுவதையும் ஆளவேண்டு மென்று
கொண்டிருக்கும் பேரவா வெற்றி பெறாது.

[நல்ல சகுணத்திற்கு அறிகுறியானவை இடது பக்கத்தை ஆதரிக்கின்றன, கெட்ட சகுணத்திற்கு அறிகுறியானவை வலது பக்கத்தை ஆதரிக்கின்றன. உபதளபதிகள் இடது புறத்தில் நிற்கின்றார்கள்.
தலைமையான தளபதி வலப்புறத்தில்,
அதாவது, அது (வெற்றி) ஓர் ஈமச்சடங்கு போல கொண்டாடப் படுகிறது.]
மாபெருந்தொகுதி மக்களைப் படுகொலைபுரிவது துக்கப்பட வேண்டிய ஒரு விஷயம்.
வெற்றி ஈமச்சடங்குகளால் கொண்டாடப் படவேண்டும்.

குறிப்பு: 1. இவை சம்பிரதாய ஏற்பாடுகள். இடப்புறம் நல்ல சகுணத்திற்கு அறிகுறி, ஆக்க வேலைக்கு அறிகுறி, வலப்புறம் கெட்ட சகுணத்தின் அறிகுறி, அழித்தல் தொழிலின் அறிகுறி.

தலை மாலைகள்

கி. வா. ஜகந்நாதன்

சிவபெருமான் தடையில்லாத தலைகளாகியவெண்டலைமாலையை அணிந்திருக்கிறான். பிரமன், இந்திரன், திருமால் என்பவர்கள் தங்களுக்கு வரையறுத்த காலம் வரையில் வாழ்ந்து, பிறகு அழிந்து போவார்கள். மீண்டும் வேறு பிரமன் முதலியோர் வருவார்கள். இதுவரைக்கும் எத்தனையோ பிரமர்கள் தோன்றி மறைந்து போய்விட்டார்கள். திருமால் களும் அப்படியே. இவ்வாறு சைவர்கள் கூறுவார்கள்.

''நூறு கோடி பிரமர்கள் நுங்கினார்
ஆறு கோடிநா ராயணர் அங்ஙனே''

என்பது தேவாரம்.

அவ்வாறு இறந்தவர்களின் தசை யொழிந்த தலைகளை மாலை யாகச் சிவபெருமான் அணிந்தி ருக்கிறானும். பிரமர்களுடைய தலைமாலைகளைத் தன் சிரத்தில் மாலையாகவும் திருமால்களின் தலைகளைத் தன் காலில் அணியும் கிங்கிணி மாலையாகவும் அணிந் திருக்கிறானும். அவை சிவபெரு மானே என்றும் நித்தியப்பொருள் என்பதைக் காட்டுகின்றன.

''அப்படி அணிதலை விட்டுவிட வேண்டும்''

என்று கூற வருகிறார் குமரகுருபர முனிவர்.

வள்ளம் போன்ற நகிலையுடைய கலைமகளின் நாயகர் பிரமர், அவர்கள் தலைகளை இறைவன் சிரமாலையாகத் தரித்திருப்பதை முதலில் சொல்லுகிறார்.

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ் நர்தலை
மாலைசிர மாலை ஆகக்
கொள்ளுவதும்.

அப்படியே திருமகளின் கொழுநர்களாகிய திருமால் களின் தலைகளைத் திருவடியிலே கிண்கிணியாகக் கோத்து அணிந் திருக்கிறான்.

மலர்மடந்தை கொழுநர்தலை
கிண்கிணியாக
கோத்துச் சாத்த
உள்ளுவதும்.

''இந்த இரண்டு காரியத் தையும் நீ விட்டு விடவேண்டும்.''
ஒழிவது, மற்று ஒழியாயேல்.

ஏன் அவ்வாறு செய்ய வேண் டும்? அதற்குக் காரணம் கூற வருகிறார், ''அப்படி நீ விட்டு விடாவிட்டால் பிரமரும் திரு மால்களும்பொய் சொல்லத்துணி வார்கள்'' என்கிறார்,

இறைவன் சோதி வடிவமாக நின்ற பொழுது பிரமன் அவனுடைய முடியை அன்னமாக உருவெடுத்துப் பறந்து சென்று தேடியும் காண முடியவில்லை. அப்படியே திருமால் வராக வடிவெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்று தேடியும் இறைவனுடைய திருவடியைக் காண முடியவில்லை. ''இப்போது அவர்களுடைய தலைகளை உன் சிரத்திலும் திருவடிகளிலும் அணிந்து கொள்வதனால் அவர்கள் முறையே உன் முடியையும் அடியையும் கண்டுவிட்டோம் என்று பொய் சொல்ல முயல்வார்கள். ஆகவே நீ அந்தத்தலைகளை அணிகலன்களாக அணிவதை விட்டு விடு.''

அந்தக் காலத்தில் பிரமன் இறைவன் திருமுடியைக் கண்டு விட்டேன் என்று சொல்ல அவனுக்குத் துணையாக, அந்த முடியிலிருந்து விழுந்த தாழம்பூ பொய்ச்சாட்சி சொல்லியது. அதனால் சிவபெருமான் தாழம்பூத் தனக்கு ஆகாதது என்று விலக்கி விட்டான்.

''இப்போது பிரமனும் திருமாலும் முடிஅடிகளைக் கண்டோம் என்று பொய் சொல்லப் புகுந்தால் அவர்களுக்கு அவர்களின் தலைகளே சாட்சியாக இருக்கும், ஆகையால் நீ அவற்றை அணிய வேண்டாம்'' என்கிறார் ஆசிரியர்.

அடிமுடிகள்
உணர்ந்தேம் என்றே
கள்ளம்மொழி வான்புகின்தென் கமலேச
அவர்க்கு அவையே கரியும் ஆமே.

''முன்பு அவர்கள் தாமாகத் தேடி அடிமுடிகளைக் காணமுடியவில்லை. இப்போது இறைவனே அவர்கள் காணாத அடியிலும் முடியிலும் அவர்கள் தலைகளை அணிந்தால் அவை அவற்றுக்கு அணிகலன்களாக நெருங்கியிருப்பதால் கண்டோம் என்று சொல்ல வாய்ப்பு உண்டாகும்; அவர்களாக முயன்று காண்பது அன்று அது, ஆனாலும் தாமே முயன்று கண்டது போலப் பொய் கூறப் புகுவார்கள். ஆகையால் விழிப்புடன் இருக்க வேண்டும். அவர்களுக்கு அத்தகைய சந்தர்ப்பத்தைக் கொடுக்க கூடாது'' என்று சொல்கிறார். அப்படிகண்டதற்கு அந்த தலைமாலைகளையே சாட்சியாக்குவார்களாம்.

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை
மாலைசிர மாலை ஆகக்
கொள்ளுவதும், மலர் மடந்தை கொழுநர்தலை
கிண்கிணியாக் கோத்துச் சாத்த
உள்ளுவதும் ஒழிவது;
மற்று ஒழியாயேல்
அடிமுடிகள் உணர்ந்தேம் என்றே
கள்ளம் மொழி வான்புகின்தென் கமலேச
அவர்க்கு அவையே கரியும் ஆமே,

தென் கமலேச நீர் முகக்கும் வள்ளம் போன்ற நகில்களை யுடைய கலைமகளின் கணவர் களாகிய பிரமதேவர்களின் தலை களைக் கோத்து அணிந்தமாலையை நின்தலையில் அணியும் மாலை யாகக் கொள்ளுவதையும், தாமரையில் வீற்றிருக்கும் மடந் தையாகிய திருமகளின் கணவர் களாகிய திருமால்களின் தலை களைக் காலில் அணியும் கிண்கிணி மாலையாகக் கோத்து அணிந்து கொள்ள நினைப்பதையும் நீ விட்டு விடவேண்டும்; அவ்வாறு விட்டு விடாவிட்டால், திருமாலும் பிரமனும் நின்னுடைய அடிமுடி களைக் கண்டறிந்தோம் என்று பொய் சொல்லப்புகுந்தால், அவர்களுக்கு அந்தத் தலைமாலை களே சாட்சியாகும்.

[வள்ளம்-வாயகன்ற பாத்திரம். சிரமாலை—தலையில் அணியும் வட்டவடிவமான மாலை. கிண் கிணி-காலில் அணியும் அணி கலன்; கிண்கிணி என்ற ஒலியை எழுப்புவதால் இந்தப் பெயர் பெற்றது. ஒழிவது-ஒழிக; வியங் கோள். மற்று; அசை, கள்ளம்--பொய்; மலையாள மொழியில் பொய்யைக் கள்ளம் என்றே சொல்வார்கள். குமர குருபரர் வாக்கில் இப்படிச் சில மலையாள மொழிச் சொற்கள் வந்துள்ளன. அவர்க்கு — பிரமனுக்கும் திரு மாலுக்கும், அவையே—அந்தச் சிரமாலையும் கிண்கிணிமாலையுமே. ஏகாரம், வேறொன்றும் வேண் டாம் என்ற பொருள் தருதலின் பிரிநிலை. கரி-சாட்சி, கரியும் என்ற உம்மை, அவர்களுடைய பொய்ம் மொழியோடு சாட்சியும் ஆகும் என்று பொருள் தருதலின் இறந்தது தழீஇய எச்ச உம்மை. என்றே, ஆமே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் அசைகள்.]

திருவாரூர் நான்மணிமாலையில் உள்ள 16-ஆவது பாட்டு இது:

உ

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்களிதழ்

அன்புடையீர்

வணக்கம். தாங்கள் முன்பு அனுப்பிய ஓராண்டுச் சந்தா இந்த [பங்குனி] மாதத்தோடு முடிவடைகிறது. தொடர்ந்து சந்தாத் தொகை அனுப்புவதுடன் தங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் சந்தாதாரர்களாகச் செய்து இதழ் வளர்ச்சிக்குப் பெரிதும் ஒத்துழைப்புத் தர வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ஆண்டுச் சந்தா ரூ, 7—50
ஆயுட் சந்தா ரூ, 100/

நிர்வாக ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபரர்
காசிமடம் திருப்பனந்தாள்
612 504. தஞ்சை மாவட்டம்,

சித்தியார் இன்பம்

வித்துவான்: நா. குருசாமி தேசிகர்

1 .ஆசிரியர் வரலாறு

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பலவற்றுள்ளும் அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது சிவஞான சித்தியாராகும். இதற்குமுதனூலாகிய சிவஞான போதத்தில் குறிப்பால் உணரக்கிடந்த பல பொருள்கள் சிவஞான சித்தியாரால் தெளிவாய் விளக்கப் பட்டிருக்கின்றன. சிவஞான சித்தியாரை அருளிச் செய்த பெரியார் அருணந்தி சிவாசாரியார் என்பவர்.

அருணந்தி சிவாசாரியார் நடுநாட்டில் திருத்துறையூர் என்னும் தலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மாமனுராகிய சடங்கவி சிவாசாரியாரின் இருபத்தொன்றுவது பரம்பரையில் (சாலிவாஹன சகாப்தம் 1175) இற்றைக்கு 600 வருடங்கட்கு முன்பு சிவாகமப் பொருள் இனிது விளங்குதற் பொருட்டு அவதாரஞ் செய்தவராவார். ஆதிசைவ மரபிற் கேற்ப வடமொழி தென்மொழி கற்றுச்சிறந்து விளங்கினுர். அதனுற் சகலாகம பண்டிதர் என்று சிறப்பிக்கப்பட்டார்.

சகல கலா வல்லவாரகிய இவர் சகல ஆகமங்களையும் வண்டியின் மேல் ஏற்றிக் கொண்டு, தில்லை, திருவண்ணுமலை, காசி, நேபாளம், முதலிய பல இடங்களிலும் சென்று தருக்க முறையிற் பலரிடம் வாதம் புரிந்து சைவத் தாபனம் செய்வாராயினர். தமது உபதேசத்தைக் கடைப்பிடிப்பார்க்கு சிவாகம விதிப்படி தீக்கைபுரிந்து அருள் புரிவாராயினர்.

இவருடைய மாணுக்கருள் பலர் திருப்பெண்ணுகடத்தில் வாழ்ந்தனர்; அவர்களனைவரும் பரம்பரைச் சைவ வேளாள மரபினராவர். அவருள் அச்சுதகளப்பாரும் ஒருவர். இவருக்குப் பிள்ளைப்பேறு இன்மையால் தம் ஆசிரியரிடம் விண்ணப்பித்தார். ஆசிரியர் தேவாரத் திருமுறையைத் திவ்ய ஆசனத்தில் எழுந்தருளப் பண்ணி அர்ச்சித்து கயிறு சாத்தும்படி பணித்தனர். திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த திருவெண்காட்டுப் பதிகத்தில் 'பேயடையா' என்னும் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாசுரத்தின் பொருளை உற்று நோக்கி சகலாகம பண்டிதர் திருவெண்காட்டில் வசிக்கும் படி கட்டளையிட்டார். ' அவர் அவ்வாறே வசித்து அங்கே உள்ள சோமசூரிய அக்கினி தீர்த்தங்களில் மூழ்கி, வெண்காட்டுப் பெருமானை வணங்கி ஓர் பிள்ளையைப் பெற்றுர்.

அப்பிள்ளையார் இரண்டுவயதில் பரஞ்சோதிமுனிவரால்சிவஞான போதம் உபதேசிக்கப் பெற்று மெய்கண்டதேவர் என்னுந் தீட்சாநாமத்தையும் ஆசாரியரால் பெற்றுப் பலருக்கும் சிவஞான போதம் உபதேசஞ் செய்வாராயினர். அந்நாளில் சகலாகம பண்டிதர் அவ்வரலாற்றைக் கேள்வியுற்று தம்முடைய மாணுக்கராகிய இவர் நம்மை வந்து பார்க்கவில்லையே யென்றெண்ணி ஆயினும் நாம் அவரைப் பார்ப்பேமென்று அவரிருக்குமிடம் சென்று வரவிரும்பி, திருவெண்ணெய் நல்லூர் வாசிகட்குத் தெரிவிக்கச் செய்தார்.

அதனைக்கேட்ட திருவெண்ணெய் நல்லூரார் தமது குலகுருவை வரவேற்க ஆயத்தம் செய்தனர். நகரை அலங்கரித்தனர். ஆகமங்கள் ஏற்றிய சகடைகளுடனும் விருதுகளுடனும் சகலாகம பண்டிதர் திருவெண்ணெய் நல்லூர் நோக்கிச் சென்றனர். அன்பர்கள் எதிர் கொண்டழைத்து விதிவலம் செய்வித்து, திருக்கோயில் தரிசனமும் செய்து திருமடத்தில் சேர்வித்து திருவமுது செய்வித்தனர். சிவபெருமான் திருவடியிற் பதிந்த சிந்தையை உடைய மெய்கண்டதேவர் தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரைப் பார்க்கவில்லை.

சகலாகமபண்டிதர் மெய்கண்டதேவர் வராமையை உணர்ந்து தாமே போய்ப் பார்க்கலாம் என்றெண்ணி அவர் இருக்குமிடம் சென்று உலாவிக் கொண்டு நின்றார். மெய்கண்டதேவர் தமது மாணுக்கர் கட்கு ஆணவமலத் தன்மையைப் பற்றி ஆராயத் தொடங்குஞ் சமயமாயிருந்தது. உலாவிக் கொண்டிருந்த பண்டிதர் ஆணவமலத்தின் இலக்கணம் என்னை என்று வினவினர். மெய்கண்டதேவர் தம் முடைய சுட்டுவிரலால் சகலாகம பண்டிதரை சுட்டிக் காட்டினர்.

உடனே சகலாகம பண்டிதர் நற்தேின்று முனைப்போடு வணங்காதிருக்கும்படி செய்ததே ஆணவ மலத்தின் இலக்கணம் என உணர்ந்து மெய்கண்டதேவரை வணங்கினர். வணங்கவே தங்குருமரபிற்கு முதற்குருவாகிய நந்தி தேவர் திருநாமத்தையே இச்சகலாகம பண்டிதருக்குச் சூட்ட வெண்ணி அருணந்தியென தீக்கைப் பெயர் அருளி, சிவஞான போதம் உபதேசித்து மனவாசகங்கடந்தார், சிற்றம்பல நாடிகள் முதலான நாற்பத் தொன்பது மாணுக்கருள் முதன் மாணுக்கராக ஏற்றருளப் பெற்றனர்.

இவ்வாறு அருளுபதேசம் பெற்ற அருணந்தி சிவாசாரியார், திருப்பெண்ணுகடத்தில் வாழ்ந்த மறைஞான சம்பந்தருக்குச் சிவஞான போதம் உபதேசித்து,

சிவஞான போதத்திற்கு ஓர் விருத்தி யுரையாக இனிய தமிழ்ச் செய்யுளால் சிவஞான சித்தியார் என்னும் நூலையும் பாசலட்சணங் களைப்பகுத்து வினவிடையாக 'இருபா இருப∴து' என்னும் நூலும் அருளிச் செய்தார்.

இவ்வாறு சிவநெறி புரந்த அருணந்தி சிவாசாரியார் நெடுங் காலம் சிவானந்த நிட்டையில் வீற்றிருந்து திருத்துறையூர் என்னும் பிறந்த பதியிலே புரட் டாசி மாதத்துப் பூர நட்சத் திரத்தில் சின்மயானந்த சிவசொ ரூபத்தில் இரண்டறக்கலந்தார்.

இவ்வரலாறு சிவஞானசித்தி யார் வழங்கிய அருணந்தி சிவா சாரியாரின் அருள் வரலாறுகும், தூத்துக்குடி திரு. பொ. முத்தையா பிள்ளை, பதிப்பித்த சித்தியார் நூலில் கண்ட உண்மை இது: அருணந்தி சிவாசாரியார் வரலாறு பல் வகையிற் பேசப் படினும் உண்மை பொதிந்த தன்மை மேற்கண்ட நூலிலே தான் காணப்படுகின்றது.

சிவஞானசித்தியார் மேன்மை பற்றித்தாயுமானவப் பெருமான்,

'பாரிலுள்ள நூல்க ளெல்லாம் பார்த்
தறியச் சித்தியிலே
யோர் விருத்தப் பாதி போதும்'
-எனவும்,
'பாதி விருத்தத் தாலிப் பார் விருத்த
மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாருநாள்
எந்நாளோ'-

எனவும், பாரட்டி போற்றுவாரா யினர்:

சிவஞான சித்தியார் அருளிய சகலாகம பண்டிதர் கற்ற கல்வி பற்றியே அவ்வாறு அழைக்கப் பட்டார். சகடையின்மேலேற்றி ஆகமங்களோடு பவனிவந்து சைவப்பயிர் தழைக்க அருள் பாலித்த அருட் செம்மல் அருணந்தி சிவாசாரியாராவார். இவர் உலகம் வாழுமாறு இரு பெரும் நூல்களை அருளிச் செய்து சைவத்தமிழ் உலகில் விடிவெள்ளி யாக இலங்குகிறார்:

சிவரானசித்தியார்க்கு மாதவச் சிவஞான யோகிகள் மிகச்சுருக்க மாக உரை வழங்கியுள்ளார்.

யாருக்கு நமஸ்காரம்

புலவர். முருகு. சுவாமிநாதன், B. Lit.

தென்னுடைய சிவனுக்கு நாடெங்கிலும் சிவாலயங்கள் அமைந்துள்ளன. சோழர் ஆட்சியிலும், பாண்டிய, பல்லவ மன்னர்கள் காலத்திலும் பல கற்றளிகள் (கற்கோயில்கள்) அமைக்கப் பட்டன. குறிப்பாக சோழநாட்டில் எங்கு நோக்கினும் உயர்ந்த கோபுரங்கள் வானளாவி நிற்கக் காண்கிறோம். இவற்றுள் பல இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையினையுடையன. வெளிநாட்டவரும் வியந்து போற்றும் சிவாலயங்கள் பல. இப்பெருமை தமிழர்களாகிய நமக்குக் கிடைத்தது நாம் செய்த புண்ணியத்தின் பயனே யாகும். எனினும் பழம் பெருமை பேசிப் பயன் என்ன? பெரும்பாலான சிவாலயங்கள் சிதைந்த நிலையில் காட்சி தருகின்றன. பல கோயில்களில் நித்திய பூசைகள் கூட நடைபெறவில்லை. காரணம்? காலப்போக்கில் மக்கள் மனம் மாறுபட்டதேயாகும்.

இந்த நிலை ஏற்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்திருந்தான் ஒரு பாண்டிய மன்னன். அவன் பெயர் சடையவர்மன் பராக்ரம பாண்டியன் என்பது. அவன் பாண்டி வளநாட்டில் தென்காசி என்ற ஊரில் சிவபெருமானுக்குச் சிறந்த பெரிய கோயிலைக் கட்டி முடித்தான். பெரும் பொருட் செலவில் குடமுழுக்கு விழாவினையும் தானே முன்னின்று நடத்தி வைத்து மகிழ்ந்தான். இருப்பினும் அவன் உள்மனத்தில் ஒரு கவலை இருந்து வந்தது. தனக்குப்பின் இந்தக் கோயிலுக்கு ஒரு கெடுதல் ஏற்பட்டு புரப்பார் இன்றிச் சிதைந்து சீரழிந்து போய் விட்டால் யாது செய்வது என்பதே அவன் கவலையாகும். குடமுழுக்கு விழா முடிவுற்ற பிறகு அரசனின் கவலை மிகுதியாயிற்று.

கோயிலின் வெளியே வந்து கோபுர வாசலில் கீழே விழுந்து பலமுறை வணங்கினன். அரசனின் செயல் கண்ட அமைச்சரும் புரோகிதரும் திகைத்தனர். அரசனின் மனக்கருத்து அறிய விரும்பினர். அப்போது அரசன் அவர்களை நோக்கி " எதிர் காலத்தில் இந்தக்கோயிலுக்கு ஏதாவது

பழுதோ, குறைபாடுகளோ உண்டானால் அதனைத் தீர்ப்பவர் யாராக இருந்தாலும் அவருக்கு இப்போதே நான் அடிமையாவேன். அது கருதித்தான் பல முறை வீழ்ந்து வணங்கினேன்'' என்று கூறினான். தன் மனக் கருத்தைச் செய்யுளாக அமைத்துக் கல்வெட்டில் பொரித்து வைத்தான். அக்கல் வெட்டினைக் கோபுர வாயில் சுவரில் இன்றும் காணலாம்.

பாடல்

1) ஆராயினும் இந்தத் தென்காசி
 மேவும் பொன்னா லயத்து
வாராதோர் குற்றம் வந்தால் அப்போ
 தங்கு வந்து அதனை
நேராகவே யொழித்துப்
 புரப்பார்களை நீதியுடன்
பாரரறியப் பணிந்தேன்
 பராக்ரம பாண்டியனே.

பொருள்

எதிர்காலத்தில் இக்கோயிலுக்கு வராத ஒரு குற்றம் ஏற்பட்டால், நேரில் வந்து அதனைப் போக்குபவர் யாரோ அவரை நான் உலகத்தார் அறிய இப்போதே வணங்குகின்றேன். பராக்ரமபாண்டியனாகிய நான்

பாடல்

2) சேலேறிய வயல் தென்காசி
 யாலயம் தெய்வச் செய
லாலே சமைந்ததிங் கென் செய
 லல்ல அதனை யின்னம்
மேலே விரிவு செய்தே
 புரப்பாரடி வீழ்ந்த வர்தம்
பாலேவல் செய்து பணிவன்
 பராக்ரம பாண்டியனே.

பொருள்

வயல் சூழ்ந்த தென்காசியிலுள்ள இந்தச் சிவாலயம் தெய்வச் செயலாலே அமைந்தது ஆகும். என்னுடைய செயலில் அல்ல. அதனை மேலும் விரிவு செய்து காக்கின்றவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் பாதங்களில் வீழ்ந்து அவர்க்கு அடிமை செய்வேன். பராக்ரம பாண்டியனாகிய நான்.

எனவே அரசனின் மனக் கிடக்கையை அறிந்து ஒவ்வொரு தமிழனும் சிவாலயம் திருப்பணி செய்யவும், நித்திய பூசைகள் இடையின்றி நடைபெறவும் தங்களாலால் இயன்ற உதவிகளைச் செய்வாராகுக.

❋❋
❋❋

அக்னி

கண்ணாபிரான்

அக்னி

ஞாபகமிருக்கிறதா உனக்கு

உன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி தகப்பனில்லாத குறையைப் போக்கித்தானே கடுமையாக உழைத்து உன்னை வாலிபனாக்கி விட்டாளே உன் தாய். அவள் கிணற்றடியில் சறுக்கி விழுந்து படுத்த படுக்கையாகக் கிடந்தாளே கவனித்தாயா. ஒப்புக்காக வாவது என்ன ஏது என்று கேட்டாயா; உன் தாய்வயிறு எரிந்தது ஒரு நாள் அவளையும் எரித்தாய்.

அக்னி

நினைவிருக்கிறதா உனக்கு.

உன் நண்பன் உனக்காகத் தன் வீட்டில் தன் படுக்கையில் தன் உணவில் இடம் கொடுத்தானே. உன் நண்பன். அவனிடமாவது நன்றியுணர்வுடன் இருந்தாயா. அவனின் தங்கையை ஆசை வார்த்தை காட்டி மயக்கினாய். அவள் உண்டாகி இருப்பது தெரிந்தும் ஊரை விட்டே ஓடி விட்டாய்.

நட்பை எரித்தாய்.

அக்னி

நினைத்துப் பார்த்தாயா நீ,

நீ கடும் பசியுடன் கூ'' நினைவில் லாமல் ஒரு வீட்டின் திண்ணையில் முடங்கிக் கிடந்தாயே. அந்த வீட்டுக்காரர் வெளியூரிலிருந்து திரும்பி வந்து கதவைத் தட்டும் போது உன்னைப் பார்த்தாரே. உன்னை எழுப் பி உணவு அளித்து, படுக்கை அளித்துப் பின்பு தம் சீடனாக்கி, தம்முடைய வைத்தியக் கலையை உனக்கும் கற்றுக் கொடுத்து உன்னைப் பயனுள்ள வனாக்கினாரே. நீ என்னசெய்தாய், அவருடைய இரண்டாம் தரமாகிய பத்தினியை மெல்ல மெல்லத் திட்டமிட்டு உன் வசமாக்கிக் கொண்டாய். ஒரு நாள் அவரே பார்த்துவிட்டார்; உடனே அன்றே அவளிடமிருந்த நகைகளை எடுத்துக் கொண்டு அந்த ஊரை விட்டும் ஓடினாய்;

குருவை எரித்தாய்.

அக்னி

எண்ணிப் பார்த்தாயா நீ

இன்னோர் ஊரில் வைத்தியம் பார்த்தாய். ஆறு மாதக் கருவானாலும் எளிதில் அழிக்கும் முறை தெரிந்து அதில் பிராபல்யம் அடைந்தாய். சில கன்னிப் பெண்களும் உன்னிடம் வந்தார்கள். வைத்தியம் செய்தாய். பின்பு அவர்களை மிரட்டி உனக்கும் இரையாக்கிக் கொண்டாய். உண்மை தெரிந்து ஊரார் உன்னைக் கொல்ல வரும்போது ஊரை விட்டுப் பறந்தாய்.

இளநெஞ்சுகளை எரித்தாய்;

அக்னி

இன்னும் சொல்கிறேன் கேள். இன்னோர் ஊரிலும் தொழில் நடத்தினாய். எந்த நேரத்தில் என்ன காரணத்திற்காக உனக்கு அக்னி என்று பெயர் சூட்டினார்களோ. உன் அக்னி பலரையும் எரித்தது. உன் மனதில் என்ன வக்கிரமோ. பலருக்கு வேண்டுமென்றே அவர்களின் வியாதிக்கு நேர்மாறான மருந்து கொடுத்தாய் சிலர் வயிற்றுப் புண்ணால் அவதியுற்றார்கள். சிலர் இரத்தம் கெட்டுப் போய் அவதியுற்றார்கள். சிலர் மூளை கெட்டுப் போய் கொடுமைக்காளானார்கள். உன்னை நெருங்க ஆளில்லாமல் அந்த ஊரை விட்டும் ஒழிந்தாய்.

தொழிலை எரித்தாய்.

அக்னி

நான் எடுத்துச் சொல்லாமல் வேறு யார் சொல்லுவார்கள். நான் தான் உன்னைப் பின் தொடர்ந்தே வந்து கொண்டிருக்கிறேனே கேள்.

இன்னோர் ஊரில் ஒருவளை திருமணம் செய்து கொண்டாய் அவளையாவது நன்றாக வைத்துக் கொண்டாயா. அவளைத் தினமும் அடிப்பதில் உதைப்பதில் திட்டுவதில் உனக்கொரு ஆனந்தம். அவள் கருவுற்றதும் அதை அழித்தாய். ஒன்று இரண்டு மூன்று நான்கு முறை. அவள் அந்தக் கொடுமையும் தாங்காமல் ஒரு நாள் நெருப்பு வைத்துக் கொண்டு எரிந்தாள்.

மனைவியை எரித்தாய்.

அக்னி

எத்தனை பேரை எரித்தாய்? கொஞ்சமாவது வருத்தப் பட்டாயா. கவலைப் பட்டாயா. இல்லவே இல்லை.

ரயிலை விட்டு அவசரமாக இறங்குகையில் கீழே விழுந்து கால்களை இழந்தாய். பிச்சை எடுத்தாய். அப்பொழுதாவது சும்மாயிருந்தாயா? ஒரு பையனை அதட்டி உருட்டி உனக்குப் பணியாளாக வைத்துக் கொண்டு அவனைப் பிச்சை எடுக்கச் செய்து உன் வயிற்றைக் கழுவிக் கொண்டாய். அவனையாவது நிம்மதியாக இருக்க விட்டாயா. அவனைத் திட்டுவதும் அடிப்பதும் கண்டிப்பதும் ...... இதோ அவன் உனக்குத் தீ வைத்து விட்டுப் போய் விட்டான். நன்றாகத் துடி முனகு, கத்து, அலறு, அணு அணுவாகச் சாகு. இன்னும் சில நிமிடங்கள் தான் உனக்கு;

அக்னீ

திருக்கணித பஞ்சாங்கம்

தி. கி. நாராயணசாமி, கடலூர்.

ரௌத்திரி ௵ பங்குனி ௴ (1981 மார்ச்—ஏப்ரல்)

திதி, நட்சத்திரம் முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

தமிழ்௳	ஆங்கிலம்௳	கிழமை	திதி	நட்சத்திரம்
1	(14—3—81)	சனி	நவமி 17-33	திருஆதிரை 20-43
2	(15—3—81)	ஞாயிறு	தசமி 17-00	புனர்பூசம் 20-54
3	(16—3—81)	திங்கள்	ஏகாதசி 16-57	பூசம் 21-33
4	(17—3—81)	செவ்வாய்	துவாதசி 17-21	ஆயில்யம் 22-38
5	(18—3—81)	புதன்	திரயோதசி 18-10	மகம் 24-06
6	(19—3—81)	வியாழன்	O சதுர்த்தசி 19-21	பூரம் 25-56
7	(20—3—81)	வெள்ளி	பௌர்ணமி 20-52	உத்திரம் 28-05
8	(21—3—81)	சனி	பிரதமை 22-43	அஸ்தம் நாள்முழுவதும்
9	(22—3—81)	ஞாயிறு	துவிதியை 24-51	,, 6 32
10	(23—3—81)	திங்கள்	திரிதியை 27-13	சித்திரை 9-15
11	(24—3—81)	செவ்வாய்	சதுர்த்தி 29-41	சுவாதி 12-09
12	(25—3—81)	புதன்	பஞ்சமி நாள்முழுவதும்	விசாகம் 15-08
13	(26—3—81)	வியாழன்	,, 8-09	அனுஷம் 18-02
14	(27—3—81)	வெள்ளி	சஷ்டி 10-26	கேட்டை 20-42
15	(28—3—81)	சனி	சப்தமி 12-20	மூலம் 22-55
16	(29—3—81)	ஞாயிறு	அஷ்டமி 13-39	பூராடம் 24-31
17	(30—3—81)	திங்கள்	நவமி 14-14	உத்திராடம் 25-22
18	(31—3—81)	செவ்வாய்	தசமி 14-00	திருஓணம் 25-24
19	(1—4—81)	புதன்	ஏகாதசி 12-55	அவிட்டம் 24-37
20	(2—4—81)	வியாழன்	துவாதசி 11-03	சதயம் 23-06
21	(3—4—81)	வெள்ளி	திரயோதசி 8-28 } சதுர்த்தசி 29-21 }	பூரட்டாதி 20-57
22	(4—4—81)	சனி	● அமாவாசை 25-49	உத்திரட்டாதி 18-20
23	(5—4—81)	ஞாயிறு	பிரதமை 22-06	ரேவதி 15-27
24	(6—4—81)	திங்கள்	துவிதியை 18-22	அசுவனி 12-30
25	(7—4—81)	செவ்வாய்	திரிதியை 14-47	* பரணி 9-39
26	(8—4—81)	புதன்	சதுர்த்தி 11-33	கார்த்திகை 7-06 பின் ரோகணி 29-00
27	(9—4—81)	வியாழன்	பஞ்சமி 8-47	மிருகசீரிஷம் 27-30
28	(10—4—81)	வெள்ளி	{ சஷ்டி 6-38 { சப்தமி 29-09	திருஆதிரை 26-39
29	(11—4—81)	சனி	அஷ்டமி 28-23	புனர்பூசம் 26-30
30	(12—4—81)	ஞாயிறு	நவமி 28-17	பூசம் 27-02
31	(13—4—81)	திங்கள் துன்மதி ௵ சித்திரை ௴ 1 தேதி	தசமி 28-49	ஆயில்யம் 28-10 (வாக்கியம்)
1	(14—4—81)	செவ்வாய்	ஷி ஏகாதசி 29-52	மகம் 29-49 (திருக்கணிதம்)

போற்றிப் பஃறொடை

தெளிவுரை:

கு. சுந்தரமூர்த்தி எம் ஏ., திருப்பனந்தாள்.

(தெ-ரை) தாய் வயிற்றை விடுத்து நிலவுலகில் பிறந்தவுடன் உடற்குக் காரணமான மாயை பெருவளியென அலைத்து மயக்க முன் கருவிலிருந்த பொழுது இப்பிறவித் துயரை நீக்கிக் கொள்ள வேண்டுமென்றிருந்த அந் நினைவையும் மறந்து நலம் தீங்கு என்னும் துன்பத் தொடர்பால் நல்லறிவு இன்றி இருக்கும் அக்காலத்தில் பசி உளதாதலை அறிவித்து அதனைப் பிறர்க்கு அறிவிக்குமாறு அழச்செய்து அவ்வாறு அழுதலைக் கண்ட தாய், உயிரும் உருகுமாறு மீதூர்ந்த அன்பினால் மனம் நடுங்கி, அதன் வழி மனமிரங்கி மார்பு வழி ஒழுகும் இன் சுவைத்தாய பாலை அக் குழவி வாய் வைத்துக் குடித்து முகம் மகிழ இருப்பது கண்டு தாய் மகிழுமாறு செய்வித்து, இவ்வாறு தாய் மகவென வைத்த பெரும் பற்றாகிய கயிற்றினால் பல்லுயிர்களையும் பிணித்து அவரவர்க்கும் பற்று மீதூருமாறு செய்வித்தருளும் அற நெறிக்கு வணக்கம்.

மாயக்கால் - மாயையாகிய பெருங்காற்று. அம்மாயக்கால் எனச் சுட்டியது முன் அறிந்தமையையும் அதன் வலிமையையும் குறிக்கவாம். உடல், உலகு முதலியவற்றால் மாயை மயக்குதலின் 'மாயக் கால் தான் மறைப்ப' என்றார். அம் மாயை உயிரைப் பல்லாற்றானும் மயக்கி வெற்றிகொள்ளும் திறத்ததாகலின் அதனைப் பெருவளியாக (காற்று) உருவகித்தார். அவ்வாறு அது மயக்குதலை 'மையல் மானுடமாய் மயங்கும் வழி' எனச் சேக்கிழார் கூறமாற்றானும் அறியலாம் நன்கு தீது - நலந்தீங்குகள். தீது என்பது ஈண்டு தீ என நின்றது. தொல்லை யுறு - துன்பப்படுகின்ற. உயிர் அறிவிக்க அறியும் தன்மையதாதலின் அதற்குளவாய பசியையும் அதனை வெளிப் படுத்தும் அழுகையையும் இறைவன் அறிவிக்க வேண்டுவதாயிற்று. ஆவி உக்கு - உயிர் நெகிழ்ந்து. அழுங்குழந்தையிடத்து அன்பு கொளச் செய்வதும். அதன் வழித்தாயிடத்துத்திம்பால் பெருகச் செய்வதும் இறைவனின் அருட்கருணையேயாம். பந்தித்த - கட்டுப்படுத்துகின்ற. உயிரினங்கள் பலவற்றையும் ஒன்றொடொன்று இயையுமாறும்

இணைந்து வாழுமாறும் செய்வது இறைவனின் கருணையேயாம் என்பார் 'பல்லுயிரும் பாலிக்க நேசத்தை வைத்த நெறி போற்றி' என்ருர். பாலிக்க - வளர.

உயிர் கருவிலிருக்கின்ற பொழுது பிறவி வேண்டாவென என்னும். குழவியாய் நிலவுலகில் வந்த பின் அதனை மறந்து விடும் என்பார்'நல்ல அறிவொழிந்து' என்ருர். தாய்கருவில் வாழ்குழவி தாமெல்லாம் வேண்டுவது தூய பிறவாமை ஒன்றே சோமேசா'' எனச் சிவஞான முனிவர் அருளுவதும் காண்க.

22 'ஆசுஅற்ற

பாலைப் பசும்பதத்தும் பாலனும் அப்பதத்தும்
நாளுக்கு நாள்சகல ஞானத்து - மூள்வித்துக்
சொண்டாள ஆளக் கருவிகொடுத்(து) ஒக்கநின்று
பண்டாரியான படி போற்றி'

(தெ-ரை) குற்றமற்ற குழவிப் பருவத்தும், இளஞ் சிறுவனாய் வளரும் பருவத்தும், நாளுக்கு நாள் மேலும் வளரும் பருவத்தும் அவ்வப் பருவத்துக்கு ஏற்ப முழுமையான அறிவைக் கொடுத்தும் அவ்வறிவு நலங்களுக்கேற்பச் செயற்படும் கருவி நலங்களைக் கொடுத்தும் உடனின்று உதவியருளும் அருட் செல்வத் தகைமைக்கு வணக்கம்.

ஆசு - குற்றம், பாலைப்பசும்பதம் - குழவிப் பருவம். ஒக்கநின்று - உடன்நின்று. பண்டாரம் - செல்வம்: அருட்செல்வம். அதனை உடையான் பண்டாரி ஆவன்.

24 'தண்டாத

புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்புசேர் கின்றன கட்டுஐந்தாக்கி - முன்புள்ள
உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூல அருங்கட்டில் உயிர்மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதிஅது காட்டி - மேல்ஓங்கும்
உந்திவியன் கட்டில் உயிர்சேர்த்துக் கலைவித்தை
அந்த அராகம் அவைமுன்பு - தந்த
தொழில்அறிவு இச்சை துணையாக மானின்

எழிலுடைய முக்குணமும் எய்தி - மருளோடு
மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்ட பொருள்
இன்ன பொருள்என்று இயம்ப வொண்ணு - அந்நிலைபோய்க்
கண்டவியன் கட்டில் கருவிகள் ஈர்ஐந்தொழியக்
கொண்டுநிய மித்துஅற்றை நாள்கொடுப்பப் - பண்டை
இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும்வகை அங்கே மருவி - உருவுடன்நின்று
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போங்கருவி யெல்லாம் புகுந்தூண்டி - நீங்காத
முன்னை மலத்து இருள்உள் மூடா வகையகத்துள்
துன்னும்இருள் நீக்கும் சுடரேபோல் - அந்நிலையே
சூக்கம் சுடர்உருவிற் பெய்து தொழிற்கு உரியர்
ஆக்கிப் பணித்த அறம்போற்றி'

(தெ-ரை) நீங்காத இழிவு மிகுந்த தசைப் போர்வையாலாய புழுக் கூடாகிய பெரிய வீடென்னும் உடம்பின்கண் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்னும் ஐந்து கட்டுக்களை உளவாக்கி, உயிர்க்குக் கால எல்லைக்கு அப்பாற்பட்டே உளதாகின்ற உண்மை நிலையான ஆணவ மறைப்பினின்றும் சிறிதும் நீங்காமல் வன்மையுடையதாய் உயிரைச் சிறைப்படுத்தி நிற்கும் மூலாதார மாகிய வீட்டில் உயிர் அறிவற்றுக் கிடப்ப அவ்விடத்தில் இளைப்பாறுங் காறும் காலத்தை நியதியினால் நிறுத்தி, அதற்குப் பின் மேலோங்கி நிற்கும் கொப்புழ் ஆகிய வீட்டில் உயிரை உயிர்ப்புக் காற்றுடன் கூடுமாறு செய்து, அவ்விடத்தே கலை, வித்தை, அராகம் ஆகிய மூன்றினாலும் உயிரது தொழில் அறிவு விருப்பம் ஆகிய மூன்றையும் எழுப்பி அதற்குத் துணையாகப் பிரகிருதி மாயையில் உண்டான அழகு பொருந்திய சாத்துவிகம், இராட்சதம், தாமதம், என்னும் முக் குணங்களையும் சேர்த்து அதற்கு மேல் இருதயமாகிய இடத்தில் சித்த மாகிய கருவியுடன் கூட்டி அவ்விடத்தில் அச்சித்தத்தால் கண்ட பொருள் இன்னதென்று அறியாமல் மயங்கி நின்ற உயிரைக் கண்ட மாகிய இடத்தில் சேர்த்து, அவ்விடத்தில் சுவை, ஒளி முதலாய ஐந்தையும், வாக்கு, கால் முதலிய தொழிற் கருவி ஐந்தையும், மனம் புத்தி முதலிய அகக்கருவிகள் நான்கையும், உயிர்க் காற்று முதலாய காற்றுக்கள் பத்தையும், புருடனையும் கூட்டி முன் செய்த இருவினைக் கீடாக முன்பு நனவிலே இன்பதுன்பங்களைத் துய்ப்பிக்கச் செய்தவாறு கனவிலும் இருவினை நுகர்வு உண்டாயதை அறிந்து அதனையும் துய்ப்பித்து பின்பு அதற்கு மேலாய பருவுடம்பின்கண் வளர்ந்து

நெற்றியாகிய ஒலக்க மண்டபத்தில் 96 கருவிகளேயும் பொருத்தி வாழுமாறு செய்வித்து முன்பிருந்தே விட்டுநீங்காது மறைந்து நின்ற ஆணவ மலமாகிய இருள் கூடாதவாறு சூக்குமம் முதலாகிய நால்வகை வாக்குகளுடன் கூட்டி ஒளி மிகச்செய்து கட்டு நிலேயில் உயிரை நிறுத்தி உயிர் செய்த வினேக்கிடாகச் சுவை ஒளி முதலிய புலன்களே காட்டி அதன்வழி உயிர்கள் அவற்றை நுகர்வதால் யான் எனதென்னும் செருக்குற்றுத் தருக்கி நிற்ப இவ்வாறு உயிர்களே அவ்வவ்விணேவயத்ததாகுமாறு செய்யும் பேரருட் திறத் திற்கு வணக்கம்.

தண்டாத - நீங்காத. உயிர் வினே நீங்குங்காறும் மாறிமாறி உடல் எடுத்தலின் 'தண்டாத புன்புலால் போர்த்த' என்ருர். கண்ணுக்குப் புலனுகாத உயிரணுக்கள் பல நிரம்பியது இவ்வுடலாதலின் 'புழுக்கு ரம்பை' என்ருர். உயிர் உய்தி பெறுதற்கு உடல் துணேயாய் இருத் தலின் 'மாமணி' எனச் சிறப்பித்தார். 'உடம்பை வளர்த்தே உயிர் வளர்த்தேனே' என்பர் திருமூலரும். உயிர் நிலேபெறுதற்குரிய இடம் ஐந்தாம். ஆதலின் அதனேக் கட்டு என்ருர். நனவு, கனவு, உறக்கம் பேருறக்கம், உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்தனுள் உயிர்படங்கல் என்னும் நிலேக்குரிய மூலாதாரத்திலிருந்து படிப்படியாக மேல் எழும் நிலேயில் அவ்வவ்விடத்தும் கருவிகள் கூடுகின்றன. கருவிகள் முப்பத்தைந்தும் கூடிய இடத்தில் அன்பு பெறுதற்குரிய நிலேயை உயிர் பெறுகின்றது. ஆதலின் 'அன்பு சேர்கின்ற கட்டு' என்ருர். 'அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என் போடு இயைந்த தொடர்பு'' என்பர் திருவள்ளுவரும். முன்புள்ள உண்மை நிலேமை மலத்தால் ஒருகால் அகலாது திண்மைச் சிறையாக்கி என இயைக்க. ஆணவம் உயிரிடத்து காலப் பழமைக்கு எட்டாத காலத்தேயே உள்ளது. அவ்வாறு அது உயிரொடு இயைந்திருப்பது இயல்பாகவே அமைந்த நிலேயாம். ஆத லின் அம் மலத்தைச்சகசமலம் என்பர். அது உயிரை ஒருபொழுதும் விடுத்து நிற்பதில்லே. மூலாதாரத்தில் உயிர் இவ்வாணவ மலத்தால் சிறைப்படுத்தப்பட்டு ஒன்றும் அறியாத நிலேயில் நிற்கும். அந்நிலேயில் அறிவின்றி கண்ணிலாக் குழவியைப் போல் கட்டுண்டு கிடக்கும். கண் மறைந்து - உயிரது அறிவை அகப்படுத்தி. தன் உணர்வாகிய அறியா மையை மேலோங்கச் செய்து. மூலஅருங்கட்டில் - மூலாதார மாகிய அரிய இடத்தில். மூடமாய் - அறிவற்றதாய். மூலாதாரத்தில் அறிவற்றுக் கிடக்கும் அவ்வுயிரொடு காலம், நியதி ஆகிய இரண் டையும் கூட்டி அதற்கு மேலுள்ள கொப்பூழில் உயிரை நிலேபெறுத் துவன் இறைவன். அங்கிருக்கும் உயிரிடத்து உயிர்க்காற்று கலே,

வித்தை, அராகம் ஆகிய மூன்றையும் கூட்டி அவற்றின் துணையால் செயல், அறிவு, விருப்பு ஆகியவற்றை உளவாக்குவன். அந்நிலை யிலுள்ள உயிர் முக்குண வயப்பட்டு திரிபுணர்ச்சி பெறும். அதன் பின் அதற்கும் மேலான இதயமாகிய அறையில் அவ்வுயிரைச் சேர்ப் பிப்பன். அதனொடு சித்தத்தையும் கூட்டுவிப்பன். அது பொழுதும் உயிர் தான் கண்ட பொருளை இன்னதெனத் தெளியாது. அந்நிலையில் அதற்கும் மேலாக விளங்கும் கழுத்தில் அறிவுப் பொறியும், தொழிற் பொறியும் ஆகிய பத்தும் நீங்கலாக எஞ்சிய இருபத்தைந்து கருவி களோடும் கூட்டுவன். அந்நிலையில் உயிர் நுண்ணுடம்புடன் கூடி கனவில் இன்ப துன்பங்களை நுகரும். அதன்பின் அதற்கும் மேலாக விளங்கும் நெற்றியில் நிறுத்தி முன் கூட்டிய கருவிகளுடன் மேலும் பல கருவிகளையும் கூட்டி 96 கருவிகளுடன் உயிரை நிலைபெறுத்துவன்: இருள் சூழாதவாறு விளக்கு வைத்தாற் போல ஆணவம் சூழாத வாறு நால்வகை வாக்குக்களையும் இயைவிப்பன். கட்டுண்ட நிலையில் இருந்த உயிரைப் படிப்படியாக மேலேறச் செய்து அவ்வந் நிலைக்கு ஏற்பக் கருவிகளையும் கூட்டி உயிரைத் தொழிற் படுத்தும் இறை வனின் கருணைப் பெருக்கு வியத்தற்குரியதாகும். மானின் - பிரகிருதி மாயையின். கண்டவியன் கட்டில் - கழுத்தாகிய அகன்ற இடத்தில். போம் கருவி எல்லாம் - உயிர் உடலொடுகூடி துய்த்தற்குரிய கருவி கள் எல்லாம். சூக்கம் – சூக்குமம்,

35 வேட்கை மிகும்

உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டிஎரியும் பெருந்தீ மாற்றுதற்குத் - திண்திறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையால் தொழில் புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து - சொல்காலை
முட்டாமற் செய்வினைக்கும் முன்செய்வினைக் கும்செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி'

(தெ-ரை) ஆசையை மிகுவிக்கும் உணவிற்காக ஒருபொழுதும் தணியாது அவ்வப்பொழுதும் மேலோங்கி நிற்கும் பசியாகிய பெரும் தீயைத் தணிப்பதற்கு ஆற்றல் மிக்க பல்லுயிர்களும் தத்தமக்கு கியைந்த வகையால் பணி செய்யுமாறு பணித்து சொல்லப்படுகின்ற காலம் தவறாது முன்செய்தவினை, செய்யும்வினை, வருவினை ஆகிய மூன்றிற்கும் நெறியான கணக்கு எழுதி அதற்கேற்ப அவரவரும் நுகரு மாறு செய்வித்தருளும் திறத்திற்கு வணக்கம்.

பொறிவழிப் பெறும் புலன்நுகர்வு உணவினுல் ஏற்படுவதாகும்: மிகுஉணவினுல் நோயும் காமமும் பெருகும். ஆதலின் 'வேட்கை மிகும் உண்டி'' என்ருர். சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என உரைத்த அறமும் காண்க. எத்துணை மண்டி எரியும் தீயையும் முழு மையாக அவித்து விட முடியும். ஆனுல் பசித்தீயை அவ்வப் பொழுது அவித்துக் கொள்ள இயலுமே யன்றி நிலையாக அவித்துக் கொள்ள இயலாது. ஆதலால் தீயினும் கொடியது பசியாகும். இவ் வுணவை எத்துணையோ வழிகளில் முயன்று பெருகின்றனர். அத்துணை வுகையும் அடங்க 'வல்லார்கள் வல்ல வகையால்' என்ருர். செய்த வினை, செய்யும்வினை, வருவினை ஆகிய மூன்றையும் நெறி பிறழாதும், காலம் தவருதும் கணக்கெழுதி வைக்கும் கருணையாளன் இறைவன் ஆவன். 'தொழுது தூ மலர் தூவித் துதித்து நின்று' அழுது காமுற்று அரற்றுகின்ருரையும், பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும் எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே' எனத் திருமுறை நுவலு வதும் ஈண்டு எண்ணற்குரியதாம்.

39 நட்டுஓங்கும்

இந்நிலைமை மானுடருக்கே யன்றி எண்ணிலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேயாய் - முன்னுடைய
நாள்நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாழ்நாளின் மாலாய் அயனுகி - நீள்நாகர்
வானுடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானு விதத்தால் நலம்பெறுநாள் - தான் மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பால்காட்ட - இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை என்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச் - சொல்லி இவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீர்என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு—மையல் தரும்
செக்கினிடைத் திரித்தும் நிவாயில் இட்டெரித்தும்
தக்க நெருப்புத் தூண் தழுவுவித்தும்—மிக்கு ஓங்கும்
நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நா அரிந்தும்
ஈராஉன் ஊனைத் தின் என்றடித்தும்—பேராமல்
அங்குஆழ் நரகத்து அழுத்து வித்தும் பின்னும்தம்
வெங்கோபம் மாருத வேட்கையராய்—இங்கொருநாள்
எண்ணிமுதற் காணுத இன்னல் கடுநரகம்
பன்னெடுநாள் செல்லும் பணிகொண்டு—முன்நாடிக்

கண்டுகடன் கழித்தல் காரியமாம் என்றுஎண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார்—மண்டு எரியில்
காய்ச்சிச் சுடஅறுக்க கண்உரிக்க நல்நிதியம்
ஈய்த்துத்தாய் தந்தைதமர் இன்புறுதல்—வாயத்தநெறி
ஓடிய தேரின்கீழ் உயிர்போன கன்ருலே
நீடுபெரும் பாவம் இன்றே நீங்கும்என - நாடித்தன்
மைந்தனேயும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சஅனைய சிந்தை நமன்தூதர் - வெஞ்சினத்தால்
அல்லல் உறுத்தும் அருநகரம் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி'

(தெ-ரை) தத்தம் வினைக்கேற்பத் துய்த்து வளரும் இந் நிலைமை மக்கட்கே யன்றி எண்ணிந்த பல உயிர்களுக்கும் ஒரு நெறியேயாய் அமைத்து இத்துணை யென வரையறுக்கப்பட்ட கால முடிவில் உடலை விடுத்து உயிர் பிரியுமாறு செய்து நல்வினையைத் துய்க்கும் அமை யத்துத் திருமால், பிரமன், இந்திரன் முதலிய இறையவர் பதங்களை வழங்கி பல்வேறு வகையான உடற்கினிய நுகர்வுகளை நுகர்வித்தும் தீவினைப் பயனைத் துய்க்கும் அமையத்து அவ்வவ்விடத்து வாழ்ந் திருக்கும் உயிர்கள் அவ்வவ் வுடம்பை விடுக்குமாறு இயமனின் ஏவலர்கள் விரைந்து வந்து பற்றித் தமது கொடுமையான தலைவ னிடத்து உய்க்க அவ்வியமனும் வுயிர்களைப் பார்த்து இரங்கிப் பாவி களே! இன்றுவரை பிறவாமை வேண்டும் பெற்றி நுமக்கு ஏற்பட வில்லையோ! என விருப்பமிக்க தன் இன் சொற்களைச் சொல்லி பின் இவர்கள் செய்திருக்கும் வினைக்கேற்ப ஒறுப்பீராக என ஆணையிட அவ் வாணையை ஏற்றுக்கொண்ட ஏவலர்கள் துன்பம் பெருகுமாறு செக் கில் இட்டு ஆட்டியும், கொடிய நெருப்பில் இட்டு எரித்தும், பெரிய நெருப்புத் தூணினைத் தழுவுமாறு செய்வித்தும், இருப்புக்கோலைக் காய்ச்சிக் காதினில் நுழைவித்தும், நாவினை அறிந்தும் அவரவரின் தசையை அரிந்து அவரவரைத் தின்னுமாறு செய்வித்தும், நீங்காத கொடு நரகங்களில் அழுத்துவித்தும், மேலும் தன் சினம் மாருதவராய் ஒருநாள் போல் பல நாளும் துன்பம் தரு கின்ற கொடிய நரகங்களில் மேலும் பல நாட்கள் இருத்துமாறு இயமனின் ஏவலர்கள் பணிசெய்யுமாறு பணித்து உலகத்தில் பெற்ருேர்கள் தம் பிள்ளைக்கு இருக்கும் நோய் மிகுதியை நன்கு ஆராய்ந்தறிந்து அந்நோய் திருமாறு அதற்கு ஏற்ற முறைமை செய் வது கடமை என உணர்ந்து அந்நோய் தீர்க்கும் மருத்துவர் பால் ஒப்புவிக்க, அவரும் அந்நோயின் குறிப்பிற்கேற்பப் பரந்தநெருப்பில் காய்ச்சிய இருப்புக்கோலினுல் சுடவும், அறுக்கவும், கண்படலத்தை

உரிக்கவும் இவ்வாறு பல படியாகத் துன்பம் தரும் முறையைச் செய்தாலும் அவற்றால் அம்மகவு வருந்தினாலும் நோய் தீருவதை உளங்கொண்டு அம் மருத்துவர்க்கு நிரப்பப் பொருள் வழங்கி இன்புறுதல் போலவும், அறநெறியில் நின்றொழுகிய மனுவரசன் தன்மகன் ஓட்டிய தேரின் கீழ் இடைப்பட்டு உயிர் நீங்கிய பசுங்கன்றின் பெரும் பாவத்திற்கு அவன் ஆளாகாது அப்பாவம் அவனிடத்தினின்றும் நீங்க வேண்டுமெனக் கருதி அதற்கென ஆய்ந்த தன் அறிவினால் தன் மைந்தனையும் தேர்க்காலில இட்டு ஊர்ந்து கொன்ற அவ்வரசனின் அறநெறி போலவும், நஞ்சனைய மனமுடைய இயமனின் ஏவலர் சினமிகுந்து உயிர்களை இத்தகைய அல்லற் படுத்தவும், கொடிய நரகத்தில் உய்ப்பவும் அவை அனைத்தும் உயிர்களின் வினைநீக்கத்திற்கேயாம் என மகிழ்ந்து நிற்கும் இறைவனின் மறக்கருணைக்கு வணக்கம்.

உயிர் இருவினைக்கு ஏற்பப் பொருந்தி வாழுவதாகலின் 'நட்டு ஓங்கும்' என்றார். முன் உடைய நாள்-கருவிலேயே இத்துணை ஆண்டுகள் இது வாழும் என வரையறுக்கப்பட்ட காலம். நாள் வரையில்-வாழ் நாள் முடிவில். நல்வினைக்கண் வாழ்நாளி-ன்நல்வினைப் பயனை நுகர்தற்குரிய வாழ்நாளில். நல்வினைப் பயத்தால் மனிதரினும் தேவர்க்கு வாழ்நாள் நீட்டித்தலின் 'நீள்நாகர்' என்றார். வானுடர்கோ என்பது தேவேந்திரன் என்னும் பெயர்பட நின்றது. நானுவிதத்தால்-பல்வேறு வகையால். ஒருவருக்கு வாழ்நாள் முடிந்துழி அவர்தம் உயிரை வாங்கிக்கொண்டு போதலில் தவறுதவர் என்பார் 'வெற்றிக் கடுந் தூதர்' என்றார் 'மாற்றருங் கூற்றம்' எனத் தொல்காப்பியம் கூறுவதும் காண்க. 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றும், 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்செம்பொருள் காண்பது அறிவு' என்றும் திருவள்ளுவர் அருளுவர். ஆதலின் அப்பிறவாமையை முன்னமேயே வேண்டிப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறன்றிக் காலம் தாழ்த்திய இந்நிலையிலும் அதனை வேண்டாதிருப்பது இரக்கத்திற்குரியது. 'இற்றைக்கும் இல்லையோ பாவி பிறவாமை' என்னும் தொடர் அவ்விரக்கம் தோன்ற நிற்பதாகும். உயிர் தாம் தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப நிரயத் துன்பங்களின் நிலை அமையும். அதனையே ஆசிரியர் செக்கிலில் இட்டு ஆட்டுவது முதல் நரகத்து அழுத்துவித்தல் ஈருகப் பலபடக்கூறுகின்றார். பிறன்மனை நயந்தார்க்கு நெருப்புத் தூணைத் தழுவுமாறு செய்விப்பர். 'காதலாள் கரிந்து நையக் கடியவே கனைந்து கன்றி, ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்த பாவத்து, ஊதுலை உருக வெந்த ஒள்ளழற் செப்புப் பாவை, ஆதகா தென்னப் புல்லி அலறுமால் யானை வேந்தே''-(சீவக: 2769),

நூல் நிறை

திருக்குறள் உரைத்திறன்

[பதிப்பாசிரியர்: பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., விலை ரூ. 35. பக்கம் 56 + 824. கிடைக்குமிடம்: முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.]

பரிமேலழகர் உரையை அடிப்படையாகக் கொண்டு பிறருரைகளுடன் ஒப்பிட்டு ஆராயப் பெற்றது.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராகத் தற்பொழுது இருந்துவரும் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் கால் நூற்றுண்டுக் காலத்திற்கு மேலாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பாடம் சொன்ன நல்லனுபவம் உடையவர். சுந்தரர் வரலாற்று ஆராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் என்ற நூலெழுதியவர். குறிப்புரை விளக்கவுரைகள் எழுதி இவர் வெளியிட்ட நூல்கள் இருபத்து மூன்று.

பதிப்புத்துறையில் மிக்க பட்டறிவு வாய்ந்த இந்நல்லாசிரியரின் 'ஆயுட் பணி' என்று போற்றத் தகுந்த பெருப்பணியாக இப்பதிப்பைச் சொல்ல வேண்டும்.

இப்பதிப்பில் நீண்டதோர் ஆராய்ச்சி முன்னுரை உள்ளது. திருவள்ளுவர் சைவர் என்பதற்கு இவர் அடுக்கடுக்காகத் தரும் சான்றுகள், அமைப்பின் நயங்களைத் தெளிவு செய்யும் அரிய விளக்கங்கள், ஆதாரமற்றது எதையும் கூருத அழகு ஆகியவை சுவைக்கத் தக்கன.

குறளும் பரிமேலழகரின் உரையும் பதிப்பில் உள்ளன. ஒவ்வொரு குறளிலும் பரிமேலழகரின் உரைக்குப் பின் இப்பதிப்பாசிரியரின் விளக்கவுரை உள்ளது. அவ்விளக்க உரையில் பரிமேலழகரின் உரைக்கு ஒரு தெளிவு செய்யப்பெற்றிருக்கும். பின்னர், பழைய உரையாசிரியர், பருதியார், மணக்குடவர், காலிங்கர் ஆகியோரின் கிடைத்த உரைகளில் வேறுபாடு மாறுபாடுகள் உள்ள இடங்கள் சுட்டப் பெற்றிருக்கும். அக்குறட் கருத்தை வேறு இலக்கியம் - மேற்கோளாக அல்லது தழுவலாகக் கையாண்டிருப்பின் குறிக்கப் பெற்றிருக்கும். மாபெருங் கவிஞர் ஜெகவீரராமரின் திருக்குறட் குமரேச வெண்பாவையும் ஆங்காங்கே சுட்டியிருப்பது ஓர் அருமையாகும்.

பல்வேறு கோணங்களில் திருக்குறள் ஆய்வுக்குப் பயனுள்ள பதிப்பாயினும் சிறப்பாக உரை வேறுபாடுகளைச் சுட்டுவது இதன் மைய நோக்கம் என்று கூறலாம்.

இவ்வளவு பெரிய அரிய ஆய்வைச் செய்து வெளியிட முழுச் செலவையும் ஏற்றவர் அறப்பெருஞ் செம்மல் பெங்களூர் புலவர் திரு. ம. வே. ஜெயராமன் அவர்கள் ஆவர். தமிழாக்கப் பணிகளில் அறம் செய்யும் அன்னாரின் தகைமை பாராட்டுக்குரியதாகும். இப்பணி 1950 ஆம் ஆண்டுமுதல் 1963 வரை 7 பெரும் புலவர்களைக் கொண்டு திருக்குறள் உரை வேறுபாடுகளை ஆய்வு செய்யக் குழு அமைத்த திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் பணிக்குச் சமமானதாகும். அவ்வுரை வேறுபாடு ஆய்வுப் பதிப்பு 1224 பக்கங்களில் 1963 ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வெளியீடாக வெளிவந்தது.

மொத்தத்தில் ஆய்வறிஞர்கள் அனைவரிடத்திலும் இருக்க வேண்டிய அரிய நூலாகும்.

இருபா இருபஃது

[உரையாசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி, பக்கங்கள்: 10 + 32 விலை: 1—25. பதிப்பும், கிடைக்குமிடமும்: ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612 504]

அருணந்தி சிவம் அருளிய இருபா இருபஃது என்னும் சாஸ்திர நூலுக்கு எளிய இனிய தெளிவுரை விளக்கவுரைகளுடன் இப்பதிப்பு அமைந்துள்ளது. சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் மிகுபேரறிவு பெற்றுள்ள திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்று ஸ்ரீ குமரகுருபரர் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்ததின் நூல் வடிவமே இது.

இவ்வண்ணம் சாஸ்திர நூல்கள் அனைத்தும் வெளிவர நிதியுதவி செய்துள்ளவர் பெங்களூர் திரு. ம. வே. ஜெயராமன் அவர்கள் ஆவார்.

ஏழு பக்கங்களில் அமைந்த ஆராய்ச்சி முன்னுரை இந்நூலின் அனைத்துச் சிறப்புக்களையும் நன்கு காட்டுகிறது.

ஞான தீபம்

[ஆசிரியர்: 'கலைவாணன்' (க. அப்புலிங்கம்) பக்கம் 10 + 226 விலை ரூ. 10 கிடைக்குமிடம்: கலைவாணன் பதிப்பகம், சேக்கிழார் இல்லம், திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி 620 005]

வாழும் மரபுவழிக் கவிஞர்களில் முதல்வராகப் பிரகாசிக்கும் கவிஞர் திலகம் திரு. கலைவாணன் அவர்கள் இயற்றிய அற்புத தெய்விகக் காவியமாகும் இது. தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்தரின் அருள் வாழ்வு வரலாற்றுக் காவியம் ஞானதீபம்.

சைவ மடம் ஸ்தாபகர் வரலாற்றைக் காவியமாகப் புனையத் தொடங்கினால் முற்றுப் பெறுவதில்லை என்னும் வார்த்தையை இக் காவியத்தை முற்றுற எழுதிய கவிஞர் முறியடித்துள்ளார்.

குருபக்தியில் சிறந்த ஸ்ரீ குருஞான சம்பந்தர் மதுரையில் வழிபாட்டுக்குச் சிவலிங்கம் பெற்று, ஆரூரில் உபதேசம் பெற்றுத் தில்லையில் சிவகாமி அளித்த பாயசம் உண்டு பெருஞானம் பெற்ற மாபெரும் அருள் வாழ்க்கையைச் சுவையாகவும் சித்தாந்தக் கருத்துக்கள் பில்கவும் அமைத்துள்ள இக்காவியம் பெரியபுராணம் போலப் பெருமை பெற்றுப் பிறங்கும் என்பதில் ஐயமில்லை.

—மு. வே. பசு

The Story of Saiva Saints

Author: Thiru. K. M. Venkataramiah M. A.
Pages: 6 + 40. Prize Rs. Two only.
Copies can be had of:- M. V. Swaminathan.
Annapoorna pathippagam. 103, North Street,
Chidambaram - 608 001.

இந்நூல் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரியில் பல ஆண்டுகள் முதல்வராக இருந்த பேராசிரியர் கா. ம. வேங்கடராமையா எம். ஏ. அவர்களால் எழுதப்பெற்றது. சைவ சமய சந்தான குரவர்களில் நான்காமவராகிய உமாபதி சிவம் இயற்றிய திருத்தொண்டர் புராண சாரம் என்ற நூலில் உள்ள பாடல்களை ஒட்டிச் சுருக்கமாக ஆங்கிலத்தில் இனிமையாக எழுதப்பெற்றது. நாயன்மார்களின் சரிதத்தை ஆங்கிலவழி அறிவதற்குப் பெரிதும் பயன்படும்.

—சொ. இரவி.

உ

சிவ சிவ

காஞ்சிபுரத்தில் தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-வது அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களின் ஆணையின்வண்ணம் நடத்தப்பெறுவது.

ரௌத்திரி ஆ பங்குனி மீ 11உ (24-3-81)

செவ்வாய்க்கிழமை

காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதசுவாமி

பங்குனி உத்திரப் பெருவிழா 14 ஆம் நாள்

திருமுறைவாணர்கள்;-

1. சங்கீதபூஷணம், கலைமாமணி,
   தருமபுரம் P. சுவாமிநாத முதலியார், சென்னை
2. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்,
   திரு. T. M. விசுவலிங்கம், சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.
3. திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்,
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.
4. திரு. பா. ராமச்சந்திரன், விருத்தாசலம்.
5. K. R. சந்திரமௌலி ... பிடில், திருவானைக்காவல்
6. திரு. கோ. வேங்கடராமன் - மிருதங்கம், திருப்பனந்தாள்.

ஏகாம்பத்துறை எந்தாய் போற்றி!

உத்தரவுப்படி

M இராதகிருஷ்ணன், M. A.,
நிர்வாக அலுவலர்.

K. SUBRAMANYA IYER B. A.,
"Thiagarajavilasam"
Triplicane P. O. Madras - 5

குறிப்பு:- காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் சந்நிதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கிக் கச்சியேகம்பர் திருவுலாவரும் வீதிகளில் இரவில் இன்னிசைத் திருமுறை கோஷ்டி நடைபெறும்.

திருத்தல யாத்திரை - திருநீடூர்

வித்துவான். பொன். முருகையன்

இது சோழ நாட்டில் காவிரியின் வடக்கே உள்ள தலங்களில் ஒன்று. இவ்வூர் மாயூரம்-சென்னை இருப்புப்பாதையில் நீடூர் புகை வண்டி நிலயத்திற்கு மேற்கில் 3 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மாயூரத்திலிருந்து பேருந்து வழியாகச் சென்றால் (5. கி. மீ.) இவ்வூரை அடையலாம்.

நான் இந்த ஊரை அடையும் பொழுது கதிரவன் மேற்குத் திசையில் மறையும் நேரம். நீடு+ஊர் என்ற பெயருக்கு ஏற்ப நீண்ட சாலைகளைப் பெற்று விளங்குகிறது திரு+நீடு+ஊர்(செல்வம் நிறைந்த ஊர்) என்பதை ஊரின் தோற்றத்தாலும் மாட மாளிகைகளாலும் உணரலாம். பிறமதத்தவர் பல்கி இருப்பதால் 'கோயில் எங்குள்ளது' என்று கேட்டுத் தான் செல்ல வேண்டியுள்ளது. அந்த நிலையில்,

''நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்
பாரு ளார்பர வித்தொழ நின்ற
பரம னைப்பணி யாவிட லாமே''.

எனும் ஆளுடை நம்பிகளின் அருள் வாக்கு நினைவுக்கு வந்தது.

ஒரு வழியாக சிவாலய அர்ச்சகர் வீட்டைத் தேடிச் சென்றேன். அவர் சாயரட்சை பூசைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தார். என்னைக்கண்ட உடனே தானும் திருக்கோயிலுக்குப் புறப்பட்டு வந்தார்.

கிழக்கு நோக்கிய சந்நிதியை உடைய கோயில் மிகவும் பழமையான தோற்றத்துடன் விளங்குகிறது. திருச்சுற்றுச் சுவர்கள் செங்கற்களால் அமைந்துள்ளன. மிகவும் பழமையான கோயில் என்பது பார்த்த அளவிலேயே புலனாகிறது. உட்கோயில் கருங்கல்வால் அமைக்கப்பட்டுள்ளது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கிய வண்ணம் கோபுரத்தின் வெளியில் அமைந்துள்ளது. ராஜகோபுரம் மிகவும் சிறியது. கோபுரத்திற்கு முன்னே கிழக்கில் பலி பீடமும், கொடி மரமும் அமைந்துள்ளன. கோயிலின் வெளியே வடக்கு நோக்கிய நிலையில் காளிகோயில் அமைந்துள்ளது. கோயிலின் வெளிச் சுற்று (வெளிப் பிரகாரம்) செடி கொடிகள் மண்டிய நிலையில் இருக்கிறது. நடுவில் பக்தர்கள் செல்வதற்கு இரண்டடி அகலத்

தில் ஒரு பாதை செதுக்கப் பட்டுள்ளது. அதுவும் சமீபத்தில் காஞ்சிபுரத்திலிருந்து வருவதாக இருந்த சிவனடியார்த் திருக் கூட்டத்திற்காக செய்த முன்னேற்பாடு எனத் தெரிய வந்தது. அப்பாதை இல்லாவிடில் வெளிச் சுற்றில் நடப்பதே கடினம். கோயிலில், தல விருட்சமாகிய மகிழ மரம் கோயிலின் தென்கிழக்கு மூலையில் செழுமையுடன் காட்சி அளிக்கிறது. உட்சுற்று சற்று சிறியதாக இருக்கிறது. ஆனால் தூய்மையுடன் விளங்குகிறது. பரிவார தெய்வங்கட்கு உட்சுற்றில் கோயில்கள் அமைந்துள்ளன. உட்சுற்றின் தென்பக்கச் சுவரில் சோழர் காலக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இறைவன் பெருமை

இறைவனின் திருப்பெயர்கள் அருட் சோமநாதர், கான நிர்த்த சங்கரர் என்பன.

வடக்கு நோக்கித் தவமிருந்து தன்னை வணங்கிய காளி தேவிக்கு அருள் செய்த பெருமையினை உடையவர்.

இறைவி திருப்பெயர்

இறைவியின் திருப்பெயர் வேயுறு தோளியம்மை அதிகாந்தியம்மை

பூசைகள்

தினந்தோறும் நான்கு கால பூசைகள் நடைபெற்று வருகின்றன.

தீர்த்தங்கள்

இந்திர தீர்த்தம், பத்ரகாளி தீர்த்தம். ஆனந்த தீர்த்தம், சந்திர புட்கரணி, பரிதி குண்டம் என்பவை:

பாடல் பெருமை

இவ்வூர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற சிறப்பினை யுடையது.

ஆளுடைய நம்பிகள் திருச் செம்பொன் பள்ளி, திருநின்றியூர் முதலான திருத்தலங்களில் பரம் பொருளைப் போற்றிப் பரவி, திரு நீடுரைப் பணியாது, திருப்புன்கூர் செல்லுங்கால் மீண்டு, அதனை வணங்கச் செல்லுங் காலை பாடியதாகிய திருப்பதிகம் ஒன்றுண்டு. இதனை,

''அப்பதியில் அன்பருடன்
அமர்ந்தகல்வார் அகலிடத்தில்
செப்பரிய புகழ் நீடூர்
பணியாது சொல்பொழுதில்
ஒப்பரிய உணர்வினால்
நினைந்தருளித் தொழிலுறுவார்
மெய்ப்பொருள்வண் தமிழ்மாலை
விளம்பியே மீண்டணைந்தார்''

—எனும் தெய்வச் சேக்கிழாரின் திருவாக்கால் உணரலாம்.

நாயனர் சிறப்பு

மன்றுளார் அடியார் அறுபத்து மூவருள் முனையடுவார் நாயனர் அவதரித்தருளிய சிறப்பினை யுடையது இந்தத் தலம்

கல்லால் அறிந்த புதுமை

இத்திருக் கோயிலில் குலோத்துங்கன், இராசாதிராசன், மூன்ரும் ராசராசன் ஆகிய சோழ

வேந்தர்களின் காலத்தில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணக் கிடக்கின்றன. கல்வெட்டுக்களுள் ஒன்றால் இதுவரை நிலவி வந்த ஐயம் தெளிந்து உண்மை அறிய வருகிறது. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை எனும் இலக்கண நூல்களை இயற்றிய ஆசிரியர் பெயரை 'அமுத சாகரர்' என வழங்கி வந்துள்ளனர். இக் கல்வெட்டுப் பாடலால் 'அமுத சாகரர்' அல்ல 'அமித சாகரர்' என்றே அறியலாம்.

இவ்வூர் இராஜாதிராஜ வள நாட்டு இந்தளூர் நாட்டைச் சேர்ந்ததாகக் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

பராமரிப்பு

தற்சமயம் இந்தக் கோயில் தமிழ்நாடு இந்து அறநிலையத் துறையினரால் நன்கு கண்காணிக்கப்பட்டு வருகிறது. காலத்துக்கேற்ப வருவாய் குறைந்தாலும் எந்தவிதக் குறையும் இன்றி நித்ய பூசைகள், திருவிளக்கு ஏற்றுதல் ஆகியவை நடைபெற்று வருகின்றன. நகரத்தார் முயற்சியாலும், பெரும் பொருட் செலவிலும் இத் திருக்கோயிலில் திருப்பணி செய்யப்பட்டு 1949ல் கும்பாபிஷேகமும் நடைபெற்ற செய்தியை அர்ச்சகர் வாயிலாக அறிந்தேன்.


அர்ச்சகர் மொழிந்த அருங்கருத்துக்கள்

கோயிலைச் சுற்றிப் பார்த்து வரும்போது பூட்டப்பட்ட இரண்டு அறைகளின்கதவுகளுக்கு மேல் ''திருஉக்ராணம்'' ''கருவேலம்'' என்று எழுதப்பட்டிருந்தது. இடத்துக்கேற்ப உக்ராணம் (சரக்கறை) என்பதற்கு ''திரு'' என்ற அடைமொழி கொடுத்திருப்பதை எண்ணி மகிழ்ந்தேன். அதே நேரத்தில் ''கருவேலம்'' என்பது என்ன என்று விளங்கவில்லை. அதுபற்றிக் கேட்டதற்கு ''கருவூலம்'' என்பதை மாற்றி எழுதி விட்டதாக அர்ச்சகர் தெரிவித்தார்.

மேலும் ''இக்கோயில் நகரத்தார் முயற்சியில் திருப்பணி செய்யப்பட்டது. திரு இந்தளூர்த் திருக்கோயிலின் செயல் அலுவலர்தான் இக்கோயிலையும் நிர்வாகம் செய்கிறார். கோயிலின் தலபுராணம் நல்ல முறையில் தயாரிக்கப் பெற்று பக்தர்களுக்கு வழங்கப் படுகிறது. இவ்வூர்க் காளி மிகவும் பிரசித்தி பெற்றவள். இயல்பாகவே சக்தியுடையவள், அல்லாமலும் வடக்கு நோக்கியிருந்து சிவபெருமானை வணங்கிப் பெற்ற அருள் வேறு. எனவே பக்தர்களுக்கு அருள்புரிந்து அவர்கள் கஷ்டங்களைப் போக்கி வருகிறாள். பல வேண்டுதல்களை முன்னிட்டுத் தினந்தோறும் பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் இவ்வூருக்கு வந்து வணங்கிப் பயன் பெற்றுச் செல்கின்றனர். இவ்வூரின் அருகாமையில் காவிரி நதி பாய்வதால், தினந்தோறும் காவிரித் திருமஞ்சன நீர் எடுத்து வந்து இறைவனுக்கு அபிடேகம் செய்யப்படுகிறது. நான் பரம்பரையாக இக் கோயிலில் பூசை செய்யும் அர்ச்சகர் குடும்பத்தைச் சேர்ந்தவன். காளியின் அருளால் எனக்கு எந்தக் குறையும் இல்லை'' எனப் புன்முறுவலுடன் கூறினர் திரு. N. கல்யாணசுந்தர குருக்கள் அவர்கள்.

திருத்தம்

சென்ற மாசி மாத இதழின், ஆலய பூஜை படிக்காசு நிதியின் நன்கொடையாளர் பட்டியலில், எண். 20. விருத்தாசலம் சண்முகம் பிள்ளை ரூ. 25, என்றிருப்பதை கள்ளிப்பட்டி திரு. K R சண்முகசுந்தரம் அவர்கள் ரூ. 5-00 என்றும், இவ்விதழில் 6—3—81 வரை கூடுதல் ரூ. 8540-00 என்றிப்பதை ரூ. 8520-00 என்றும் திருத்திப் படித்துக் கொள்ளவும்.



திருவிளையாடற் புராணம்

உரை நடை

அன்னை ஆகிய அந்த அழிதகையாளும் தன் உள்ளத்தில் இனிய உயிர்த்துணையாகவும், மனத்துக்குக் காவலாகவும் விளங்கிய[1] நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வரும் விட்டு நீங்கப் பெற்றவளாய் அவன் விருப்பத்திற்கு இணங்கினாள்.

காமம் அறிவினை அழித்தல்

காமத்தால் வரும் இன்பமோ மிகச் சிறியது; அதனால் வரும் துன்பமோ கரையில்லாத கடல்போலப் பெரியது என்ற உண்மையினை அப்பாவியின் மூலம் யாவரும் அறிந்து கொள்ளும் வகையில், அவன் இக் கொடிய தீவினையால் வருந்துவானாயினான். காம மயக்கமாகிய (இராகு என்னும்) பாம்பு, அறிவாகிய மதியை (திங்களை) விழுங்கியது.

தனயன் தந்தையைக் கொல்லுதல்

அந்தக் கீழ்மகன் தாயினைக்கூடி ஒழுகும் செயலினை அவன் தந்தை குறிப்பால் அறிந்து பிறர் செவிப்படாவண்ணம் அதனை உள்ளத்தின் கண் அடக்கி ஒழுகினான்; மற்றொரு நாளில் வெளிப்படக் கண்டும் யாதொன்றும் கூறானாயினன். அப்பொழுது அவன் மகன் கோபங் கொண்டு, ''எனது தந்தையைக் கொல்வேன்'' என்று எதிர்த்து எழுந்தான். அதனைக் கண்டு பெற்றவள், ''நீ தாயினிடத்துக் காமவின்பத்தினை நுகர்ந்தாய்; இன்னும் தந்தையைக் கொன்றனையாயின் என்ன பயனை அடைவாய்'' என்று கூறித் தடுத்தாள், அதற்கு அக் கொடியவன், ''காமுகர்களுக்குத் தாயாலும் தந்தையாலும் என்ன பயன்? இனிய அருளைப் பெறின் என்ன பயன்? அறத்தைப்பெறின் என்ன பயன்?'' என்றனன். காமமாகிய கள்ளை உண்டு அறிவிழந்த அப் பாவி, ஒரு மண்வெட்டியை எடுத்துத் தன் தந்தையை [2]ஐங்குரவருள் ஒருவன் என்றும் அறியாதவனாய் அவனைத் துண்டுபட வெட்டிக் கொன்றான்.

---

1. நாணம்-தன் கணவனை அன்றி மற்றோரைக் காண நாணுதல்; மடம் - குரவர் உணர்த்தக்கொண்டு கொண்டதை வெளிவிடாமை; தன் கணவன் குணத்தையன்றி மற்றோர் குணத்தை அறியாமையுமாம். அச்சம் - தனித்திருத்தல் முதலியவற்றிற்கு அஞ்சுதல்; பயிர்ப்பு - பயிலாத பொருளில் அருவருப்புக் கொள்ளுதல்.

2. ஐங்குரவர்-இவர் அரசன், ஆசான், தாய், தந்தை, தமையன் என்போர்.

மாபாதகன் தன் பொருளையும் தாயையும் பறிகொடுத்தல்

பிறகு அப்பாதகன் இரவின்கண் தன்னாற் கொல்லப்பட்ட தந்தையைத் தகனஞ் செய்துவிட்டுச் சுமக்கத் தகுந்த பொருளோடும் தன் தாயோடும் கற்கள் நிறைந்த காட்டின் வழியே நெடுந்தூரம் சென்றான். அப்பொழுது இடிபோன்ற சொல்லையும், கூரிய கணையைப் பூட்டிய வில்லையுங் கொண்ட ஆறலைக்கும் வேடர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு, ''செல்லாதே நில்'' என்று நிறுத்தி, அவன் கையிலிருந்த பொருளினையும் தாம் பறித்துக் கொண்டு அப் பார்ப் பனியையும் கைக்கொண்டு போயினர்.

'தூர தேசத்தில் சென்று இடையூறின்றி வாழலாம்' என அவன் கருதிய எண்ணம் ஒன்று; அவனுக்கு நிகழ்ந்த செய்தி மற்றொன்று. ''நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது'' என்னும் பழமொழி இந்த மாபாதகனிடத்தே பலித்தது.

மாபாதகன் பிரமகத்தியால் துன்புறுதல்

வெட்டுண்டு இறந்த தந்தையானவன், ''தாயை வேடர் கையிலே சிக்கவிட்ட தன் தனயனுக்குத் துணையாவர் இனியாவர் என்று வருந்தித் துணை இழந்த இப்பொழுது யானே துணையாவேன்'' என்று தொடர்பவனைப்போல மாபாதக வடிவாய் வந்து அவனைப் பற்றினான். அவ்வாறு பற்றிய கொலைப் பாவம் ஐயோ! என்று அலறும்; அழும்; சிவதா! என்று முறையிடும்; பாவம் கொலைப்பழி இத்தன்மையதோ! பாவம்! பாவம்! ஐயகோ என்று புலம்பும்; கையை அசைத்து நிலத்தில் மோதும்; உடம்பின் நிழல்போல்விடாது பின்பற்றும்; புண்ணிய தீர்த்தத்தினும், புண்ணிய தலத்தினும், பெரியோர் அருகிலும் செல்ல வொட்டாது; சிவ சரிதமும், சிவ நாமமும் காதுகளில் புகவொட்டாது; ஒருகால் புகினும் மனத்தில் புகவிடாது; அவற்றை நாவினால் கூற விடாது; கண்ணுறங்க விடாது; முன்னும் பின்னும் சூழ்ந்து தன் கொய்சகத்தைப் பிடித்து நின்று இழுக்கா நிற்கும். இப்படியே மாபா தகத்தினால் அலைந்து, ''இனி என் செய்வேன்; இனி என் செய்வேன்'' என்று கருதிப் பெருந்துன்பமுற்றுப் பன்னெடு நாள் தனியே உலகெங்கும் திரிந்து அஞ்சி வருந்தினான்.

மாபாதகன் மதுரையை அணுகுதல்

உலகின்கண் கண்டோர் அனைவரும் வருந்துமாறு திரியா நின்ற மாபாதகன் தனது வலிமுழுதும் குறைந்தவனாய்ச் சிவபெருமானுடைய திருவருட் செயலினால் அக் கொலைப்பாவம் குறுகி நீங்கு நாள் அணுக மதுரைப்பதியை அணுகினான்.

அம்மையப்பர் வேடுவனும் வேடுவச்சியுமாக வருதல்

அப்போது அங்கயற்கண் அம்மையார் தந்தத்தாலாகிய குழைகளை இரு செவிகளிலும், புலிப்பல்லாலாகிய தாலிகோத்த மங்கல நாணைக் கழுத்திலும் தரித்த ஒரு வேடுவச்சியாகவும், சோமசுந்தரக் கடவுள் வேங்கை மலரைச் சிரசிலும், கலைமானின் இரு கொம்பைப்போல் வளைந்து காதுவரையில் சென்ற மீசையினை முகத்திலும், பெரிய வில்லை நீண்ட கையிலும் கொண்ட வேடுவனாகவும் திருவுருக்கொண்டு மேகங்கள் தவழும் திருக்கோபுர வாயிலின் பக்கத்தில் வந்திருந்தனர். அங்குப் பனங்கருக்குப் போன்ற வாயினையுடைய நாய்கள் சிறிதும் அவர்களை விட்டு நீங்காது காவல் புரியவும், அம்பும் வில்லும் ஒரு புறத்தில் கிடந்து விளங்கவும் இறைவனாகிய வேடுவன் இறைவியாகிய வேடுவச்சியோடும் சூதாடிக்கொண்டிருந்தார்.

இறைவன் இறைவிக்குக் காமக்கேட்டைக் கூறுதல்

[1]வேழமுண்ட விளாங்கனிபோலச் சிறிதும் உள்ளீடு இல்லாதவனாய்த் துன்பத்துடன் அங்கே வருகின்ற மாபாதகனது வருகையைச் சோமசுந்தரக்கடவுள் கண்டு இறைவியை நோக்கி, ''ஒருவரும் மனத்தாலும் நினைத்தற்கரிய கொடிய பாதகன் வருவதைக் காண்பாயாக; யாவர்க்கும் காம நோயை உண்டாக்கும் மாரனாலே அலைப்புண்டு உயிர் சோர்ந்தவர்களின் உள்ளங்கள், செல்லுதற்குரிய இடத்தினை அறிந்து சென்று சேரா; குணமும், குலமும், ஒழுக்கமுங் குறைதலையும் கொலையும் பழிபாவங்களும் உண்டாதலையும் பார்க்கமாட்டா; தம் உயிருக்கும் அவ்விடத்தே அழிவு வருதலையும் எண்ணமாட்டா; கள்ளுண்டலும் காமமும் அறிவைக் கெடுக்கும்; அவற்றுள்ளே [2]காமமானது நினைக்கினும், காணினும், கேட்கினும் விஷம் தலைக்கேறியதுபோல அப்பொழுதே அறிவைக் கெடுத்துவிடும்; கள்ளோ அவ்வாறு கெடுக்காது; உண்டபொழுதில் மட்டுமே அறிவைக் கெடுக்கும். காமமே கொலைகளுக்கெல்லாம் காரணம்; கண்ணோட்ட

---

1. வேழம்-விளங்கனிக்கு வருவதோர் நோய். அஃது இளநீர்க்குத் தேரை என்னும் நோய்போல விளங்கனியை உள்ளீடில்லாததாகச் செய்வது. இது வேழம் என்னும் பெயர் ஒற்றுமையால் 'வேழமுண்ட விளாங்கனி, என்று வழங்கலாயிற்று.

2. இங்கு ''உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும், கள்ளுக்கில் காமத்திற்(கு) உண்டு'' (திருக்குறள்) எனவும். ''உள்ளினும் சுட்டிடும் உணருங் கேள்வியில், கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத், தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை ஈதினால், கள்ளினும் கொடியது காமத் தீயதே'' (கந்த புராணம்) எனவும் வருவன சிந்திக்கற்பாலன.

மில்லாத காமமே களவுகளுக்கெல்லாம் காரணம்; கூற்றுவனும் அஞ்சும் காமமே கள்ளுண்டலுக்கும் காரணம்; ஆதலால் காமமே நரகபூமியைக் காணியாட்சியாகக் கொடுக்க வல்லதாகும்'' என்று கூறியருளினர்.

காமமே கொலைகட் கெல்லாங் காரணம்; கண்ணோடாத
காமமே களவுக் கெல் லாங் காரணம்; கூற்றம் அஞ்சும்
காமமே கள்ளுண் டற்குங் காரணம்; ஆத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

இறைவன் மாபாதகனுக்குப் பிரமபழி நீங்கும் வழி கூறல்

கொலைப் பாவத்தால் பெருந்துயருழந்து அங்கு வந்த கொடிய பாதகனுடைய முகத்தைச் சிவபெருமானாகிய வேடுவன் நோக்கி, ''ஏடா பார்ப்பானே! நீ துன்பத்தால் அலைப்புண்டு வருந்தி வாடுவது என்னை'' என்று வினவியருளினர். திங்கள் வேணியினையுடைய வேடனாகிய சிவபெருமானின் திருவருட் பார்வை சிறிது தலைப்படப் பாவந் தீர்ந்து தனது முன்னை உணர்வு தோன்ற, அவன் முற்பிறப்பிற் செய்த பாவ முதிர்ச்சியாலே பிறந்து தாயைக் கூடியதையும், அது காரணமாகத் தந்தையைக் கொன்றதையும், பின்னுளில் அக் கொலைப் பாவம் பிரமகத்தி வடிவமாக வந்து பிடித்து வருத்த எங்கும் திரிந்து அது நீங்கப் பெறாமல் இப் பதி வந்தடைந்ததையும் எடுத்துக் கூறி அழுது கொண்டு நின்றான். வேட்டுவ வடிவங்கொண்டு அகத்தில் அருள் சுரந்துநின்ற கருணை மூர்த்தி அப்பாவியைநோக்கி, ''இப்பாவம் எங்கே போனாலும் இப்பதியிலன்றி நீங்காது; உனது பெயரைக் கூறினவரின் மரபிலுள்ளோரும்நரகத்தினை அடையுமாறு கொடியபாவத்தை நீ அறிந்து செய்துள்ளாய்; இதனைப்போக்க வல்லவர் யாவர்? நாம் உன் மீது திருவருள்நோக்கஞ் செய்தமையால் இப் பாவம் எளிதினில் நீங்கும் வண்ணம் கூறுகின்றோம்; கையினில் பிச்சை ஏற்று ஒருபொழுது மட்டும் உண்பாய்; சிவனடியார்களுக்குக் குற்றேவல் செய்வாய்; சூரியன் உதிக்கு முன்னே நித்திரைவிட்டு எழுந்து பசிய அறுகம் புல்லைக் கொய்து, பசுக்களுக்குக் கொடுக்கக்கடவாய்; நாடோறும் முக்காலத்தினும் திருக்கோயில் புறத்தொட்டித் தீர்த்தத்திலே நீராடிச் சிவபெருமானை நூற்றெட்டு முறை அங்கப் பிரதட்சணம் செய்யக்கடவாய்; [1]இத்தவ நெறியில் நின்றால் இக்கொலைப்பழி நீங்கும்'' என்று கூறி அருளினர்.

---

1. இவற்றுடன், மெய்ம்முழுதும் விபூதியணிந்து திருவைந்தெழுத்தினைச்செபிக்க; காயத்திரியை ஆயிரத்தெட்டுமுறை உச்சரிக்க; உருத்திர மந்திரத்தை நாளும் அத்தியயனம் செய்க என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணங் கூறும்.

அழியக்கடவோனைக் காத்தலே பாதுகாப்பு

அதுகேட்ட வேட்டுவிச்சியாகிய மீனாட்சியம்மையார் சிவபெருமானை நோக்கி, ''எம்பெருமானே! இக்கொடியவன், தான்செய்த பாவத்தித்திற்கு அளவிறந்தகாலம் வரையும் இருபத்தெட்டுக்கோடி நரகத்தில் விழுந்தானாயினும் உய்யும் வகையில்லாத பாவியாவான்; இவனுக்கு உய்யும் வகையினை அருளிச் செய்தல் என்னை?'' என்று வினவினார். அதற்குச் சிவபெருமான், ''கொல்லும் பெரும்பழிக்கு அஞ்சாத புலையராயினும், அவரும் நினைத்தால் அச்சமுண்டாக்கும் கொடும் பழியினைஅஞ்சாதுசெய்த மாபாதகத்தால் கட்டப்பட்டு எங்கும் தீரும் வகையில்லாமல் வேறு பற்றுக்கோடும் இன்றி அழியக் கடவோனைக் காப்பதல்லவா பாதுகாப்பாகும்'' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அடுபழி அஞ்சா நீச ராயினும் நினைக்கின் அச்சம்
படுபழி அஞ்சான் செய்த பாதகத் தொடக்குண்(டு) எங்கும்
விடுவகை இன்றி வேறு களைகணும் இன்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி.

உமாதேவியார் இறைவரைப் புகழ்தல்

அப்போது அங்கயற்கண்ணியம்மையார் சிவபெருமானை நோக்கி, ''நீர் யாதொன்று [1] செய்தற்கும், செய்யாமைக்கும், வேறொன்று செய்தற்கும் உண்மையான ஆற்றலுடைய கருணைவள்ளல்; நீர் விரும்பினால் எத்தகைய கொடிய பாவிகளும் உய்யுமாறு செய்தல் உமது அருள் விளையாட்டன்றோ'' என்று மனக்களிப்பு மீதூர விண்ணப்பஞ் செய்தருளினார். உடனே வேட்டுவ வடிவங்கொண்ட சோம சுந்தரக்கடவுள் மறைந்தருளினார். மேகம் மறைய உடன் மறைந்து செல்லும் மின்னல்போல விடாது பின்செல்லும் மீனாட்சியம்மையாரும் மறைந்தருளினார்.

மாபாதகன் சிவப்பேறு அடைதல்

கொடிய பாதகனான பார்ப்பானும் அதனைக்கண்டு பெருவியப்புக் கொண்டான்; மதுரை நாயகன் கூறியருளிய வண்ணமே நன்னெறிக்

---

1. இங்குச் செய்தல், செய்யாமை, வேறொன்று செய்தல் என்பன முறையே கர்த்திருத்துவம், அகர்த்திருத்துவம், அந்நியதா கர்த்திருத்துவம் என்று சொல்லப்படும் இறைமைக் குணங்களாம். கர்த்திருத்துவம் – தாமே நேரில் ஒன்றைச் செய்தல். அகர்த்திருத்துவம் – வேறு முன்னிலையாகச் செய்தல். அந்நியதா கர்த்திருத்துவம்-ஒன்றை மற்றொன்றாகச் செய்தல்.

கேதுவாகிய விரதச்செயலையும், தவஒழுக்கத்தையும் மேற்கொண்டு செய்து மூன்றுமாதத்திலே மாபாதகம் முற்றும் நீங்கித் தெய்வத் தன்மை பொருந்திய பிராமண வடிவம் பெற்றான்; சொல்லின் எல்லையைக் கடந்த சோமசுந்தரக்கடவுளின் திருவடியிலே பற்பலவட மொழியாவாகிய பாமாலைகளைப் பத்தியுடன் தொடுத்துச் சாத்திப் பணிந்து வணங்கினான்; பின்பு சச்சிதானந்த வடிவாகிய சோம சுந்தரக்கடவுளின் அழகிய திருவடியின்கண்ணே கலந்தனன்.

புறத்தொட்டித் தீர்த்தப் பெருமை

தாயிடம் காமவின்பம் நுகர்ந்து தந்தையும் குரவனுமாகிய அந்த ணனையும் கொன்ற மாபாதகத்தையும் போக்கி வீடுபேற்றினைப் [1] புறத்தொட்டித் தீர்த்தம் அளித்தது என்றால் பின் நீரிழிவு, குட்டம், பெருவயிறு, ஈளை, (இருமல், கபநோய்), வெப்பு முதலாகிய இந் நோய்களைத் தீர்க்கும் தீர்த்தம்[2] என்று கூறுவதோ இதற்கு மேன்மை ஆகும்! நிலையழிந்த வேதியனது மாபாதகத்தைப் போக்கியதை அறிந்து, குலோத்துங்க பாண்டியனும், அமைச்சர்களும், பாண்டிய நாட்டு மக்களும், பிறநாட்டினரும், தேவர்களும் ஆச்சரியமடைந்து, ''உரையுணர்வு கடந்த பெரியதிருவருளை இக்கயவன்மீது வைத் தருளிய காரணம் யாதோ?'' என்று கண்களினின்றும் ஆனந்த அருவி பொழிய, நான்மாடக்கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளைத் துதித்துப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினார்கள்.

செய்யுள் — 41

ஆகச் செய்யுள் — 1574

---

1. புறத்தொட்டித் தீர்த்தம் - இது புறத்தொட்டி நிருமாலியத் தீர்த்தம் எனவும் பெயர் பெறும். இத் தீர்த்தம் சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளிய இரண்டாவது பிரகாரத்தின் வடக்குப் பகுதியில் கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயிலுக்கு எதிர்ப்புறம் அமைந்துள்ளது. இது சொக்கலிங்கப் பெருமானுக்கு அபிஷேகமாகிய தீர்த்தம் விழும் இரண்டாவது தொட்டி ஆகும்.

2. இன்னும் இத்தீர்த்தம் போக்கும் வியாதி முதலியவற்றைக் கடம்பவன புராணம் - இலீலா சங்கிரக வத்தியாயம் – புறத்தொட்டி நின்மாலிய தீர்த்தம் அகற்றும் நரக சேடானுபவ வியாதிகள் (94-15) செய்யுட்கள்) என்ற பகுதியில் விரிவாய்க் காணலாம்.

27. அங்கம் வெட்டின படலம்

வாளாசிரியனும் நன்றிமறந்த சித்தனும்

குலோத்துங்க பாண்டியன் உலகைப் பாதுகாத்து ஆட்சிபுரியும் காலத்திலே அயல்நாட்டைச்சார்ந்த முதிர்ந்தவயதுடையான் ஒருவன் மதுரைத் திருநகரில் வந்து குடியேறி, வாட்போர் வித்தையினைக் கற்பித்து வாழ்ந்து வந்தான். அவன் சோமசுந்தரக் கடவுளை நாடோறும் இடையறாத அன்பும் தானுமாகச் சென்று வணங்கி வழி படலால் வினையின் வலியை வெல்லும் பேரறிவுடையனாகும் வாளினைக் கைக்கொண்டு போர்புரியும் வித்தையில் சிறந்த அம் முதி யோனைப் பல இளைஞர்கள் அடைந்து வணங்கி வாள் வித்தை பயின்று வந்தனர். வாள் வித்தை பயிலும் ஆண் சிங்கத்தை ஒத்த மாணவர் பலருள்ளே உய்யும் வகையறியாத பாவியாகிய சித்தன் என்ற ஒருவன் இருந்தான். அவன் ஆகூழின் வலியினால் அவ்வாள் வித்தையை நன்கு பயின்று சிறந்து விளங்கினான். அதனால் அவன் தன்னைப் பலரும் நன்கு மதித்தலை அறிந்து மிகச் செருக்குக் கொண்டான். அன்றியும் தன்னாசிரியனுக்கு மாறாய்த் தானும் ஒரு வித்தைக் கூடமும் (சிலம்பக் கூடமும்) அமைத்தான். பலரும்வந்து அவனிடம் வாள் வித்தை பயின் றனர். அப்போது அவன் தன்னாசிரியனைக்காட்டிலும் அதிகமாகிய ஊதியத்தைப் பெறுவானாயினான்.

சித்தன் தன்னாசிரியன் மனைவியை விரும்புதல்

சித்தன் தானொருவனேஇருவரின் வாள்வித்தை பயிற்றலால்வரும் வருவாயையும் ஒருசேர அடையும் கருத்தினையுடையவனாய், அவ் வாசிரியனை அவ்வூரினின்றும் வெளியேற்ற எண்ணினான்; அவனிடத்தே வாட்போர் பயிலும் மாணாக்கர்களைத் தன்னிடம் பயில வருமாறு மனந்திரித்து நாடோறும் அவனுக்கு இடையூறே செய்வானாயினான். தாயினிடம் இன்பம் நுகர்ந்த மாபாதகனுக்கு இளையான்போல்வா னாகிய சித்தன் அத்துடன் நில்லாமல் பொறுமையிலே நிலத்தினை ஒத்த அவ்வாசிரியன் இல்லாதபொழுது அவனுடைய மனைவியிடத்தே சென்று, 'இடன் உண்டோ, இடன் உண்டோ' என்று அடுத்தடுத்துச் சிறிதும் அஞ்சாது கேட்டுக் கேட்டு நீங்க, அவள் ஒன்றும் பேசாது சும்மா இருந்தாள். சித்தன் மற்றொரு நாட் சென்று அவள் கையினைப் பிடித்து இழுத்தனன்; மனமாகிய காவலையுடைய அவள் அவனை வெளியே தள்ளிக்கதவினைச்சாத்தித் தாழிட்டுத் தனது கற்புநிலையைக் காத்துக்கொண்டனள். அப்பொழுது தன் எண்ணம் தவறிய சித்தன் காமத்தீ வெதுப்பப் போயினான். பாவிகள் எல்லாருள்ளும் பெருங்

கொடும்பாவியாகிய சித்தன் செய்த இழிசெயலை அறக்கற்பினை உடைய அப்பெண்ணானவள் தன் கணவனுக்குத் தெரிவியாது உள்ளத்தின்கண் அடக்கிக்கொண்டு உயிர்கள்தோறும் நிறைந்துள்ள நான்மாடக் கூடலில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக்கடவுளை நினைந்து வருந்தினாள்.

சோமசுந்தரக்கடவுள் சித்தனைப் போருக்கழைத்தல்

கொன்றை மலர் மாலையை அணிந்த சடையினையுடையவனும் வேற்றுநாட்டில் செய்த மாபாதகத்தையும் தொலைத்த மதுரைப் பெருமானும், பக்குவமான உயிர்களுக்கும் தானே உணர்த்தும் புண்ணிய வடிவினனுமாகிய சோமசுந்தரக் கடவுள் நீசனாகிய சித்தன் செய்த தீங்கினை மனத்திலுணர்ந்து அவனைத் தண்டிக்கத் திருவுளங்கொண்டு, வாள் வித்தை பயிற்றும் அவ்வாசிரியனைப் போலத் திருவுருவந்தாங்கிச் சித்தனிடம் சென்று, ''சித்தா! காளையாகிய நீயும், மிகுந்த மூப்படைந்த யாமும் வாட்போர் புரிந்து நம் தம் வலிமைகளை அளந்தறிவோம்; நாளைக்கு நீ நகரின் புறத்தே வருக; நாமும் வருவோம்'' என்று கூறியருளினார். அதற்குச் சித்தன் மகிழ்ந்து, 'நல்லது' என்று மகிழ்ந்து அதனுக்கு உடன்பட்டான்.

வாளாசிரியர் வடிவந்தாங்கிய சோமசுந்தரக் கடவுள் சித்தனிடமிருந்து மீண்டு போகும்பொழுது உலகமானது நிறைந்த இருள் வெள்ளத்தில் முழுகும்படி சூரியன் மேற்குக்கடலில் மூழ்கினான். பிறகு, குற்றமற்ற குரவனுக்குத் துன்பஞ்செய்த சித்தனுடைய பாவச்செறிவு போலக் கரிய இருள்நிறைந்த இரவின் வலிமை கெடுமாறு வாளாசிரியனாகிய இறைவன் அச்சித்தனுடைய உடலைச் சிதைப்பதற்குத் தீட்டுகின்ற வாட்படைபோலக் கதிரவன் கிழக்கு மலையிலே தோன்றினான்.

ஆசில்நன் குரவற்(கு) இன்னா ஆற்றினோன் பாவம் போல
மாசிருள் திணிந்த கங்குல் வலிகெட வடிவாள் விஞ்சைத்
தேசிகன் ஒருவன் அன்னான் திணியுடல் சிதைப்பத் தீட்டுங்
காய்சின வாள்போற் கிழைக் கல்லிடை முளைத்தான் வெய்யோன்.

செய்ந்நன்றி கொன்றவனாகிய சித்தன் சிவபெருமான் ஆணைக்குட்பட்ட துர்க்கையையும் வாட்படையையும் வழிபட்டுத் துதித்துக் கச்சினை இறுக்கிக்கட்டி வாளையும், கேடகத்தையும் கையிலேந்திச் சென்று வாளாசிரியர் சொல்லிய போர்க்களத்தை அடைந்தான்.

சிவ சிவ

' ஸ்ரீ குமரகுருபரர் '

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
அவர்களின் அருளாணையின் வண்ணம் வெளிவரும்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுட் சந்தா	(உள்நாடு)	ரூ.	100—00
,,	(வெளிநாடு)	ரூ.	125—00
ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	ரூ.	7—50
,,	(ஸ்ரீலங்கா)	ரூ.	10—00
,,	(வெளிநாடு)	ரூ.	12—00

விளம்பர கட்டண விகிதங்கள்

அட்டை பின்பக்கம் 2 வண்ணங்கள்	ரூ.	150—00
முன் அட்டை உள்பக்கம்	ரூ.	125—00
பின் அட்டை உள்பக்கம்	ரூ.	100—00
உள் முழுபக்கம்	ரூ.	60—00
உள் அரைப்பக்கம்	ரூ.	30—00

ஸ்ரீ காசிமடத்தின் புதிய வெளியீடுகள் :-

திருவருட்பயன்	(விளக்க உரையுடன்)	விலை ரூ.	1—50
நீதிநெறி விளக்கம்	,,	விலை ரூ.	1—50
உண்மை நெறி விளக்கம்	,,	விலை ரூ.	0—75
கந்தர்கலி வெண்பா	,,	விலை ரூ.	1—50
உண்மை விளக்கம்	,,	விலை ரூ.	1—00
திருவுந்தியார்	,,	விலை ரூ.	1—25
கொடிக்கவியும் வினுவெண்பாவும்	,,	விலை ரூ.	0—75
திருக்களிற்றுப்படியார்	,,	விலை ரூ.	1—25
திருக்குறள் ஒரு பொதுமறை		விலை ரூ.	3—00
மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்-கருத்தரங்கக் கட்டுரைகள்		விலை ரூ.	3—00
திருவாசகம்—ஆங்கில மொழிபெயர்ப்பு (கோ. வன்மீகநாதன்)		விலை ரூ.	15—00
தொல்காப்பியம்-நன்னூல்-எழுத்ததிகாரம் (வித்துவான் க. வெள்ளைவாரணனுர்)		விலை ரூ.	10—00
திருவருட்பயன் - நிரம்ப அழகிய தேசிகர் உரையும் திரு. க. வெள்ளைவாரணனுர் எழுதிய உரை விளக்கமும்		விலை ரூ.	5—00
திருவிளையாடற் புராணம் (மதுரைக் காண்டம் மட்டும்)		விலை ரூ.	4—00

ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள் ரூ. 50/-க்கு மேல் பெறும்
விற்பனையாளர்கள் அன்பர்கட்கு 20% கழிவு உண்டு.

ரூ. 1000 க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு அனுப்புகைச்செலவு இலவசம்

முகவரி :- நிர்வாக ஆசிரியர், 'ஸ்ரீகுமரகுருபரர்'
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் அ. கு. எ. 612 504
(தஞ்சை மாவட்டம்)

ஸ்ரீ காசிமடத்திற்காக வெளியிட்டவரும் ஆசிரியரும் ம. வே. பசுபதி,
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ குமரகுருபரர் அச்சகத்தில்
அச்சிட்டவர் முத்து. மெய்கண்டதேவன்
முகவரி :- ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் – Pin 612 504